# தமிழரசு

1-3-1986 75காசு




இன்றே காணவாரீர் ஈடு இணையற்ற இவ்வாண்டின்

# சுற்றுலா பொருட்காட்சி

தீவுத்திடல், சென்னை.






பிரமாண்டமான அரங்குகளின்
கண்கொள்ளாக் காட்சி.

DIPR/ 86/ ELEGANT




# தமிழக அரசின்

# தொழிற்புரட்சியில் முப்பெரும் விழா

வடஆர்க்காடு மாவட்டத்தில், காட்பாடி அருகே உள்ள வந்த ரந்தாங்கல் கிராமத்தில், தமிழ் நாடு வெடிமருந்துத் தொழிற் சாலை உற்பத்தித் துவக்க விழா அண்மையில் (9-2-86) சீரும் சிறப்புமாக நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் இவ் விழாவில் பங்கேற்றுச் சிறப்பித் தார்.

தமிழ்நாடு - ஆந்திர மாநில எல்லையிலே 700 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ள இத் தொழிற்சாலை சுவீடன், நார்வே, மேற்கு ஜெர்மனி நாட்டு நிறு வனங்களின் தொழில்நுட்ப உதவி யோடு அமைக்கப்பட்டுள்ளது. மலைச்சரிவில், 23 கோடி ரூபாய் செலவில் அமைந்துள்ள இத் தொழிற்சாலைக்கான முக்கியக் கட்டடங்கள் தரைமட்டத்தின் கீழே அமைக்கப்பட்டிருக்கின் றன.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி முதலீட்டுக் கழகம் சார்பில் உருவாக்கப்பட்ட இத்தொழிற் சாலையின் உற்பத்தியை மாண்பு மிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார். அதற்கு முன்னதாக, அலங்கார மேடைக்கருகே அமைந்திருந்த 'டிட்கோ தொழில் கண்காட்சி'யைத் திறந்து வைத்துச் சுற்றிப் பார்த் தார்.

இந்த விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ. 21கோடி செலவிலான வெடிமருந்து ஊக் கிகள், திரிகள் திட்டத்திற்கும் ரூ. 23கோடியிலான அம்மோனியம் நைட்ரேட்-நைட்ரிக் அமிலம் திட்டத்திற்கும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ரூ. 50 இலட்சம் செலவில் உருவாக்கவிருக்கும் தொழிலாளர் குடியிருப்புக்கும் அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு தமிழ்நாடு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு ஆனூர் கோ. ஜெகதீசன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். அப் போது அவர் ''உலக நாடுகளெல் லாம் வியக்கும் வகையில் தமிழ்

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2017
குரோதன - மாசி 17
மலர் : 16 இதழ் : 17
1-3-1986

நாடு தொழில் துறையில் மிக விரைந்து முன்னேறி வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு'' என்று பெருமிதத்தோடு தெரிவித்தார்.

விழாத் தலைமையேற்று உரையாற்றிய தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத் அவர்கள், ''தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் நான் தலைவரானபின் நடக்கும் முதல் விழா இது; நான் பிறந்த மாவட்டத்தில் நடைபெறும் விழாவும் கூட'' என்று பெருமையோடு குறிப்பிட்டார்.

இவ்விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், 'நேற்று இன்று நாளை' என்ற தலைப்பில் தொழில் வளர்ச்சி முதலீட்டுக் கழகம் ஆங்கிலத்தில் தயாரித்திருந்த சிறப்பு மலரை வெளியிட்டார். இதன் முதல் பிரதியை அரசுத் தலைமைச் செயலாளர் திரு டி. வி. அந்தோணி இ.ஆ.ப. அவர்கள் பெற்றுக் கொண்டார்.

வெடி மருந்துத் தொழிற்சாலை நிர்வாகத்தின் சார்பில்- திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு அளித்தார்.

இவ்விழாவில் - வடஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு தானியல் குணாநிதி இ.ஆ.ப., மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு ராமராஜன் இருவருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். இத்தொழிற்சாலைப் பணியில் ஈடுபட்டுள்ள பிறநாட்டுத் தொழில் வல்லுநர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தஞ்சாவூர் தட்டுகள் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் திரு ஏ. சி. சண்முகம், எம்.பி, பொன்னாடை அணிவித்தார். திரு. ஜி. ரகுபதி, எம்.எல்.ஏ. மாலையணிவித்தார். தமிழ்நாடு வாணிபக் கழகத் தலைவர் திரு யாஸ்மின் அகமது வெள்ளியினால் செய்யப்பட்ட வீரவாள் ஒன்றைப் பரிசாக அளித்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி ஜானகிஅம்மையார் அவர்கள் - தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா திருவுருவப் படங்களைத் திறந்து வைத்தார்.



தொழில் வளர்ச்சி முதலீட்டுக் கழக மலரை மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வெளியிட, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு டி. வி. அந்தோணி இ.ஆ.ப., பெற்றுக் கொள்ளுதல்.



மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு க. இராசாராம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம் ஆகியோர் இவ்விழாவில் உரையாற்றுகையில் - மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் தொழில் வளர்ச்சிக்கு இந்த அரசு தீட்டிச் செயல்படுத்தி வரும் சிறந்த பல திட்டங்களைச் சுட்டிக் காட்டினார்கள்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்த இவ்விழா தொடக்கத்தில், மெல்லிசை மன்னர் திரு எம். எஸ். விசுவநாதன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

விழா முடிவில் - திருமதி சந்திரா தண்டாயுதபாணி குழுவைச் சேர்ந்த, கறுப்பு வெள்ளை சிவப்புச் சீருடை அணிந்த சிறுமிகளின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது.

''பெரியார் அவர்தான் பெரியார்!''

மாண்புமிகு முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி ஜானகி அம்மையார் அவர்கள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் திருவுருவப் படங்களைத் திறந்து வைத்தல்.





தொழில் வளர்ச்சி முதலீட்டுக் கழகம் உருவாக்கியிருந்த கண்காட்சியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தல்.

''அண்ணா என்றோர்
ராகம்-அது
ஆயிரம் தலைமுறை
கேட்கும்!''

''பல்லாண்டு பல்லாண்டு
நீ வாழ்கவே!''

ஆகிய பாடல்களுக்கு அவர்கள் சிறப்புற நடனமாடினர்.

பின்னர் - தமிழ்நாடு வெடி மருந்துத் தொழிற்சாலையின் நிர்வாக இயக்குநர் திரு சி. என். சந்திரசேகரன் நன்றி கூறினார்.

இரவில் நடைபெற்ற வாண வேடிக்கை அதிர்வேட்டு நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன. பல்லாயிரக் கணக்கான மக்கள் இவ்விழாவில் பங்கேற்றார்கள்.

இப்போதைக்கு இந்த வெடி மருந்துத் தொழிற்சாலையில் 450 பேர் வேலை பார்க்கிறார்கள். விரைவிலேயே இதன் மூலம் 2500 பேர் நேர்முக வேலை வாய்ப்பும் 500 பேர் மறைமுக வேலைவாய்ப்பும் பெறவிருக்கிறார்கள். வடஆர்க்காடு மாவட்ட மக்கள் 75 விழுக்காடு இத்தொழிற்சாலையில் வேலை வாய்ப்புப் பெறுவர். தாழ்த்தப் பட்ட மக்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்புக் கிட்டும்.

இத்தொழிற்சாலையின் மூலம் ஆண்டுக்கு 30 கோடி ரூபாய் மதிப்புள்ள 15,000 டன் தரமான வெடி மருந்து உற்பத்தி ஆகும்.

—பி.எல். ராஜேந்திரன்

கலைநிகழ்ச்சிகள் நடத்திய சிறுமியருடன் மாண்புமிகு முதல்வர்.



வளரும் தமிழகம் :



# நாளும் வளர்ந்திடும் கல்வி

மாண்புமிகு கல்வி அமைச்சர்

திரு செ. அரங்கநாயகம்

வற்றாது நீர்சுரக்கும் நீரோடையைப் போல, கல்வி தமிழ்நாட்டில் நாளும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. கல்வியின் சிறப்பைக் கூற வந்த வள்ளுவர்,

''ஒருமைக்கண் தாம்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து''

என்று கூறியுள்ளார். இதனின்று ஒருவர் கற்ற கல்வியானது எவ்வகையில் பயன்படுகிறது என்பது தெள்ளெனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

1985-86ல் தமிழக அரசு நிதிநிலை அறிக்கையில் கல்வி மானியத்தின் கீழ் ஒதுக்கியுள்ள தொகை ரூபாய் 468 கோடியாகும். இஃது அரசின் அவ்வாண்டின் மொத்தச் செலவான ரூபாய் 2315 கோடியில் 20 விழுக்காட்டுக்கும் அதிகமாகும். இந்த மானியத்தோடு 1 முதல் 10ஆம்வகுப்பு வரையிலுள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கச் செலவிடுவது, பிற செலவினங்கள் உட்பட மொத்தம் ரூ. 558 கோடி கல்விக்காகத் தமிழகஅரசு செலவிடுகிறது.

ஆறாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில், அதாவது 1984-85க்குள் அனைத்து இந்தியாவிலும் 95 விழுக்காடு 6 முதல் 11வயது வரையுள்ள சிறுவர் சிறுமியர்களைப் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்பது இலக்காக இருந்தது. ஆனால் தமிழகத்தில் 1984-85 இறுதிக்குள் 98.66 விழுக்காடு சிறுவர் சிறுமியர் பள்ளியில் சேர்க்கப்பட்டிருந்தனர். 11 முதல் 14 வயதுத் தொகுதியினரில் 50 விழுக்காடு பள்ளிகளில் சேர்க்க வேண்டுமென்ற இலக்கிற்கும் மேலாக 72.18 விழுக்காடு பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். 1984-85ஆம் ஆண்டில் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட மாணவ மாணவியர் எண்ணிக்கை 2.98 இலட்சமாகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் புதிதாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவ, மாணவியரின் எண்ணிக்கை 13.67 இலட்சமாக உயர்ந்துள்ளது. இவ்வகையில் 1983-84ஆம் ஆண்டில் பள்ளிகளில் அதிக அளவில் மாணவ, மாணவியரைச் சேர்த்ததற்காக மொத்தத்தில் ரூ. 12.25 இலட்சம் தமிழக அரசுக்கு மைய அரசு விருதாக அளித்துள்ளது. மொத்தத்தில் தமிழகத்தில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் புதிதாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவ, மாணவியர் எண்ணிக்கை 13.67 இலட்சமாகும் எனக் குறிப்பிட்டேன்.

1 முதல் 3வது வகுப்பு மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களும், சிலேட்டுகளும் தமிழக அரசு வழங்கி வருகிறது. இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, தற்பொழுது 1 முதல் 8வது வகுப்பு வரையிலும் சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்கு இலவசப் பாடநூல்களும், சீருடைகளும் வழங்கப்படுகின்றன. பெரும் எண்ணிக்கையில் மாணவ, மாணவியரைக் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்த்துள்ளதற்குக் காரணம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் இலவசச் சத்துணவுத் திட்டம்

மற்றும் இலவசச் சீருடை, பாடநூல்கள் வழங்கும் திட்டங்களே ஆகும்.

தமிழகத்தில் குழந்தைகள் காப்பகங்கள் 4140 உள்ளன. இவை ஒவ்வொன்றிலும் இளஞ்சிறார் பள்ளி வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது. மேலும் வருகிற ஆண்டுகளில் 10,000 குழந்தைகள் காப்பகங்களில் இளஞ்சிறார் பள்ளி வகுப்புகள் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சத்துணவுத் திட்டம் 1.7.82 முதல் துவங்கப்பட்டது. பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான 1982ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. முதலில் 1.7.82 முதல், 1 முதல் 5 வகுப்பு வரையுள்ள மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்ட திட்டம், பிறகு 15.9.82 முதல் 6 முதல் 10 வகுப்பு வரையிலும் விரிவாக்கப்பட்டது. இதன் பயனாக 37,447 பள்ளிகளில் 55.37 இலட்சம் மாணவ மாணவியர் இலவசச் சத்துணவு பெற்றுப் பயன்பெறுகின்றனர். இதுபோல் குழந்தைகள் காப்பகம் மூலம் 24.34 இலட்சம் குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

பள்ளிக் கல்வி, பொதுவாக 1 முதல் 12 வகுப்பு வரை ஏறத்தாழ அனைத்து நிலைகளிலும் இலவசமாகவே வழங்கப்படுகிறது. தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 3 வகுப்புகளிலும் பயிலும் யாரும் தோல்வியுறச் செய்யப்படுவதில்லை. மேற்சொன்ன அனைத்து நலத் திட்டங்களின் பயனாக, பள்ளிகளில் சேரும் 6 முதல் 11 வயதுத் தொகுதி மாணவ, மாணவியர் தொடர்ந்து படிக்காமல் இடையிலேயே நின்று விடும் நிலைமை சீரடைந்துள்ளது.

தற்போது 28,847 தொடக்கப்பள்ளிகளில், 1,16,305 ஆசிரியர்களும், 5,691 நடுநிலைப் பள்ளிகளில் 66,849 ஆசிரியர்களும் உள்ளனர். 2,476 உயர்நிலைப் பள்ளிகளில் 38,324 ஆசிரியர்களும், 1,471 மேல்நிலைப் பள்ளிகளில் 62,932 ஆசிரியர்களும் இருக்கின்றனர். 1985-86ல் மட்டும் 85 புதிய உயர்நிலைப்பள்ளிகளும், 49 புதிய மேல்நிலைப் பள்ளிகளும் திறக்கப்பட்டுள்ளன. இவை தவிர தொடர்ந்து கல்வி கற்க முடியாமல் நின்றுவிட்டவர்கள் அஞ்சல் வழியே உயர்கல்வி பெற்றுக்கொள்ள, திறந்தவெளிப் பள்ளி என்ற திட்டம் ஒன்றும் அமலாக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் தற்பொழுது குழந்தைகளுக்குக் கற்றுத்தரப்படும் பாடங்கள் பெரும்பாலும் ஏட்டறிவு சார்ந்தவையாகவே உள்ளன. அவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கும் எதிர்கால வாழ்க்கைக்கும் இக்கல்வி முறை உதவுவதாக இல்லை. தொடர்ந்து படிக்காமல் பல்வேறு கட்டங்களில் பள்ளி வாழ்க்கையை நிறுத்தி விடுபவர்களுடைய தேவைகளை இம்முறை கணக்கிற் கொள்ளுவதேயில்லை. எனவே சுய உழைப்பின் நன்மையை மாணவர்கள் உணருவதற்கும், கல்வி முறைக்கும் வாழ்க்கைக்கும் உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கும் வகை செய்யும் வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் திட்டம் 1984-85ஆம் ஆண்டு முதல், சில பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளன. படிப்படியாக இத்திட்டம் 1 முதல் 12 வகுப்புகளில் தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மைய அரசு தற்போது

வாழ்க்கைக் களத்தில் இறங்குவதற்கு முன்பு பயிற்சியும், பக்குவமும், அடிப்படைக் கொள்கைகளில் தெளிவும் பெற வேண்டிய பருவம், மாணவப் பருவம்.

* * *

அறிவாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை; அறிவும், ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.



உருவாக்கத் திட்டமிட்டிருக்கும் புதிய கல்விக் கொள்கையும், வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் திட்டமும் ஏறத்தாழ ஒரே மாதிரியானவை என்பதே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

1.7.1978 முதல் மேல்நிலைப்பள்ளிகளில் துவக்கப்பட்ட தொழில் கல்வி வகுப்புகள் அனைத்திந்திய அளவில் பாராட்டைப் பெற்றுள்ளன. 1984-85ல் 969 மேல்நிலைப் பள்ளிகளில் சுமார் 62 ஆயிரம் மாணவர்கள் பல்வேறு தொழிற்கல்விப் பாடங்களைக் கற்று வருகின்றனர். அகில இந்தியாவிலும் தொழிற்கல்வி பயிலும் மொத்த மாணவர்களில் பாதிப்பேர் தமிழகத்தில் உள்ளனர் என்பதை நான் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன். தற்பொழுது ''கம்ப்யூட்டர்'' என்னும் மின் கணிப்புப் பொறியியல் மற்றும் ஆசிரியர் பயிற்சியும் மேல்நிலைப்பள்ளிகளில் தொழில் கல்வி வகுப்புகளாகத் துவங்கப்பட்டுள்ளன. மேல்நிலைக் கல்வி சீர்பெறும் வண்ணம், 644 அரசு மேல்நிலைப்பள்ளிகள் ஒவ்வொன்றிலும் ஆய்வுக்கூடமும் வகுப்பறையும் கட்ட அரசு ரூ.12 கோடிக்கு மேல் ஒப்புதல் அளித்துள்ளதும் இதில் 582 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதும் நமக்குப் பெருமிதம் தரும் செய்தியாகும்.

1981 சென்சஸ்படி தமிழ்நாட்டில் 15 முதல் 35 வயதுத் தொகுதியினரில் எழுத்தறிவற்றோர் எண்ணிக்கை 64 இலட்சமாகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முதியோர் கல்வித் திட்டத்தின் கீழ் இவர்களில் 23 இலட்சம் பேர்களுக்கு எழுத்தறிவு வழங்கப்பட்டுள்ளது. 1985-86 இறுதிக்குள் மேலும் 7 இலட்சம் பேர்களுக்கு எழுத்தறிவு அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 6.81 இலட்சம் பேர் 31.12.85 வரை எழுத்தறிவு பெற்றுள்ளனர்.

கல்லூரிகளிலிருந்து 1978-79 முதல், புகுமுக வகுப்பு நீங்கிய பின்னர் கல்லூரிக் கல்வியின் தர உயர்வுக்குத் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தற்பொழுதுள்ள 193 கலைக்கல்லூரிகளில் 13,890 ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். அவற்றில் 1.92 இலட்சம் மாணவர்கள் பயின்று வருகின்றனர். ஆண்டுதோறும் புதிய பட்டப்படிப்பு வகுப்புகளும், பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் தொடங்கப்பட்டு வருகின்றன. 1985-86ஆம்



கம்ப்யூட்டர் பயிற்சி

ஆண்டில் 6 அரசுக் கல்லூரிகளில் புதிய பட்ட வகுப்புகளும், 2 அரசுக் கல்லூரிகளில் புதிய பட்ட மேல் வகுப்புகளும் தொடங்கப்பட்டுள்ளன. தனியார் கல்லூரிகளைப் பொறுத்த வரை, புதிய பட்டப் படிப்புத் தொடங்க விண்ணப்பித்த ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு புதிய பட்ட வகுப்புத் துவங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மதுரை காமராஜர், அண்ணாமலை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள் நடத்தி வரும் அஞ்சல் முறை வகுப்புகளில் 1984-85ல் பட்ட வகுப்புகளிலும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளிலும் 1.26 இலட்சம் பேர் பயின்று வந்தனர். மேலும் மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் நடத்தி வந்த ''அனைவரும் படிக்கத் தக்க பல்கலைக் கழக வகுப்புகளில்'' ஏறத்தாழ 13,540 பேர் பயின்று வந்தனர். கடந்த மூன்று ஆண்டுகளில் அரசுக் கல்லூரிகள் 12ல் பி.காம் மாலைநேர வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து தேர்வில் வெற்றி பெற்று வரும் மாணவர்கள் கல்லூரிப் படிப்பைத் தொடரும் வகையில் சொந்த நிதியில் சென்னை அண்ணாநகரில் அண்ணா ஆதர்ஷ மகளிர் கல்லூரியும், பெரம்பலூரில் தந்தை ஹான்ஸ் ரோவர் கல்லூரியும் தொடங்க அரசு அனுமதித்து உள்ளது.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய 4 இடங்களில் உள்ள 4 சட்டக் கல்லூரிகளில் 4,000 மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். இந்திய வழக்கறிஞர் மன்றத்தில் யோசனைக்கேற்ப இம் மாநிலத்திலுள்ள சட்டக் கல்லூரிகளில் 1983-84 முதல் ஐந்தாண்டு (மேல்நிலைப் பள்ளிப் படிப்பில் தேறிய பின் 5 ஆண்டு) சட்டப் படிப்பு முறை புகுத்தப்பட்டது.

ஒரு நாட்டின் பொருளாதார வளமை அந்நாட்டின் தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சியைச் சார்ந்ததாகும். தமிழ்நாட்டில் தொழில்நுட்பக் கல்வி கடந்த ஆண்டுகளில் பெரும் வளர்ச்சியடைந்துள்ளது. 1978-79ஆம் ஆண்டு முடிய தொழில்நுட்பக் கல்வித் துறையின் கீழ் 6 பொறியியற் கல்லூரிகளும் 38 பாலிடெக்னிக்குகள் மட்டுமே இருந்தன. தற்பொழுது 29 பொறியியல் கல்லூரிகளும், 10 மகளிர் பாலிடெக்னிக்குகள் உட்பட 129 பாலிடெக்னிக்குகள் உள்ளன. முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழில்நுட்பக் கல்வித் துறைக்கு ரூ.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்துறை அடைந்துள்ள பெரும் வளர்ச்சி காரணமாக நிதி ஒதுக்கீடு அளவு ஏழாவது திட்டக் காலத்தில் ரூ. 2125 இலட்சம் அளவிற்கு அதிகரித்துள்ளது.

அறிவியல், தொழில்நுட்பத் துறைகளில் ஏற்பட்டுவரும் பெரும் மாற்றங்களுக்கு ஏற்ப, கம்ப்யூட்டர், இன்ஸ்ட்ருமென்டேஷன், மெயின்டனென்ஸ் இன்ஜினியரிங் போன்ற பல்வேறு புதிய பாடங்களும் புகுத்தப்பட்டுள்ளன. வளர்ந்துவரும் பொறியியல், தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்பத் தொழில் நுட்பப் பயிலகங்களிலுள்ள ஆய்வுக் கூடங்களும், துறைகளும் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன.

இப்பொழுது நமது பாரதப் பிரதமர் அவர்கள் விருப்பத்திற்கிணங்க நம் நாட்டின் கல்வி முறையை முழுமையாகச் சீரமைப்பதற்கான முனைப்பான நடவடிக்கைகளில் மைய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகமானது மாநில அரசுகளுடன் கலந்து ஈடுபட்டுள்ளது. புதிய கல்விக்கொள்கை பற்றி நாடு தழுவிய கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றின் முடிவாகச் சிறந்த முடிவுகள் எடுக்கப்பட்டு, தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி மேலும் சிறந்த முறையில் அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*(2.2.1986ல் வானொலியில் ஆற்றிய உரை)*

## படமும் செய்தியும்



இந்தியாவில் உள்ள ஜிம்பாவே நாட்டுத் தூதர் டாக்டர் நிக். ஜி. ஜி. மகூரா மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களை 18.2.86 அன்று ராஜ்பவனில் சந்தித்தார்.



மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு எம். என். சந்தூல்கர் தலைமையில் மேதகு ஆளுநர் அவர்கள், மோட்டார் வண்டி விபத்துக்குள்ளானவர்களுக்கான மக்கள் நீதிமன்ற அமர்வை 15.2.86 அன்று தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு காஷ்மீர் முதல்வர் திரு ஜி. எம். ஷா அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களை அன்னாரின் இல்லத்தில் 4.2.86 அன்று சந்தித்து உரையாடினார்.





திரு ஏ.வி.எம். சரவணன் அவர்கள் சென்னை மாநகர ஷெரீப்பாக நியமிக்கப் பெற்றார். மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். (13.1.86)



சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 15.2.86 அன்று நடைபெற்ற கிராம நிர்வாக அதிகாரிகள் மாநில மாநாட்டில் கலந்து கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 2.75 லட்சம் நிதி வழங்கப் பட்டது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் 69வது பிறந்த நாளை யொட்டி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மேலமையூர் கிராமத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ 58 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் குழந்தைகள் கல்வி சத்துணவுக் கூடத்தை மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. ஆனூர் ஜெகதீசன் அவர்கள் 17.1.86 அன்று திறந்து வைத்தார்



# சேலம் செழிக்கிறது!



**வை. பழனிச்சாமி, இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சியாளர்,**
**சேலம்.**

**1985** ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 752 நிறுவனங்களுக்குச் சிறுதொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் பொறியியல், சவ்வரிசி மற்றும் விசைத்தறி போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

இம்மாதத்தில் மூங்கில் பொருட்கள், கயிறு உற்பத்தி மற்றும் பாய்கள் உற்பத்தி போன்ற 38 தொழில்களுக்குக் கைவினைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் 110 கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

இம்மாதத்தில் 9 விண்ணப்பங்கள் மின் இணைப்பிற்காகப் பெறப்பட்டு அவை அனைத்தும் மின்வாரியத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டன. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் உள்ள 10 தொழில்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை 23 நலிவடைந்த சிறு தொழில்களைக் கண்டறிந்து சென்னை சிறு தொழில் சேவை நிலையத்திற்குத் தொழில் நுட்ப அறிக்கை பெற அனுப்பப்பட்டுள்ளது.

1985 டிசம்பர் திங்கள் முடிய 5 மனுக்கள் மீது ரூ. 9.32 இலட்சம் தொகைக்குக் கடன் வழங்க வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது.

இம்மாதத்தில் எலுச்சிபாளையம், தலைவாசல் மற்றும் எருமைப்பட்டி ஊராட்சி ஒன்றியங்களில் ஊக்குவிப்பு முகாம் கூட்டங்கள் நடைபெற்றன. இதில் மொத்தம் 81 பேர்கள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு அரசு திட்டத்தின் மூலம் வேண்டிய உதவிகள் செய்வதும், நடந்து வரும் தொழிலை வளரச் செய்யவும் அறிவுரை வழங்கப்பட்டது.

இந்தியப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டம் 1985 86-ஆம் ஆண்டிற்கும் நீடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்திற்கான குறியீடு 1500 பேர்களாகும். இத்திட்டத்தின் கீழ் அதிகப் பட்சம் ரூ. 25,000 வரை கடன் வழங்கலாம் என அரசு உத்தரவிட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் கடன் விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுக்கும் சிறப்புப் பணிக்குழு இதுவரை 53 நேர்முகத் தேர்வுகளை நடத்தியுள்ளது. இதுவரை 12083 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டுள்ளனர். மாவட்டவேலை வாய்ப்பகத்திலிருந்து பெறப்பட்ட 883 பேர்களுக்கான பட்டியலும் இதில் அடங்கும். 4201 பேர்கள் நேர்முகத் தேர்விற்குப் பணிக்குழு முன் வருகைத் தந்தவர்களில் மொத்தம் 1543 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வங்கிகளுக்குக் கடன் வழங்கப் பரிந்துரை செய்யப்பட்டது.

**தேசிய வேலைவாய்ப்புப் பணி**

1985-ஆம் ஆண்டு சனவரி முதல் டிசம்பர் 85 வரை 25154 பதிவுதாரர்கள் வேலைவாய்ப்புக் கோரி பதிவு செய்துள்ளனர். இவர்களில் 5924 பெண்கள். 1985டிசம்பர் முடிய 3499 பதிவுதாரர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். இவர்களில் பெண்கள் 500 பேர். தாழ்த்தப்பட்டவர்கள் 701, பழங்குடியினர் 27 பேர், இலங்கை அகதிகள் 96 பேர் ஆவர். தொழில் கல்வி பயின்றவர்கள் 160 பேர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

31-12-1985 தேதிய நிலவரப்படி உயர்பதிவேட்டில் 109453 பதிவுதாரர்கள் உள்ளனர். இவர்களில் 23181 பேர் பெண்கள். 2239 இலங்கை அகதிகள், 9 பர்மா அகதிகள், தொழிற்கல்வி பயின்றவர்கள் 3058 பதிவுதாரர்கள் உள்ளனர். தாழ்த்தப்பட்டவர்கள் 25916 பேரும், பழங்குடியினர் 2049 பேரும் உள்ளனர்.

1146 உடல் ஊனமுற்ற பதிவுதாரர்கள் வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்துள்ளனர். இவர்களில் 75 பதிவுதாரர்கள் வேலையில் அமர்த்தப்பட்டனர். உடல் ஊனமுற்ற பதிவுதாரர்கள் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 24 பேர்களுக்கு வங்கிகள் மூலம் சிறுகடன் வசதி பெற்றுத் தரப்பட்டது.

இம்மாவட்டத்திலுள்ள 7554 தகுதியுள்ள பதிவுதாரர்களுக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகையாக மொத்தம் ரூ30,09,134.10 வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**முன்னாள் படைவீரர் நலம்:**

1985 டிசம்பர் மாதம் முடிய 450 முன்னாள் படைவீரர்கள் வேலை வேண்டிப் பதிவு செய்துள்ளனர். டிசம்பர் திங்களில்

மட்டும் 19 முன்னாள படை வீரர்கள் பதிவு செய்துள்ளனர். ஒரு முன்னாள் படைவீரர் ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார். 2 முன்னாள் படைவீரர்களின் கைம் பெண்களுக்குக்குடும்பஓய்வூதியம் வழங்கப்பட்டது. ஒரு முன்னாள் படைவீரருக்குப்பணி ஓய்வூதியம் வழங்கப்பட்டது. 5 முன்னாள் படை வீரர் மகளின் திருமண மானியமாக ரூ. 2500 வழங்கப் பட்டது. 3 முன்னாள் படை வீரர்களுக்குக்காச நோய் மானிய மாக ரூ. 300, 5 முன்னாள் படைவீரர் மனைவியருக்கு உதவித் தொகையாக ரூ. 25 வமங்கப்பட்டது.

**தமிழ்நாடு மின் வாரியம்**

இலவச மின்சாரம் பெறும் சிறு விவசாயிகள் எண்ணிக்கை 5891 ஆகும். விவசாயப் பம்பு செட்டிற்கு மின் இணைப்புகள் மொத்தம் 2445 ஆகும்.

இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மின் இணைப்புகள் மொத்தம் 53 கொடுக்கப்பட்டுள்ளது.



தகுதியுள்ள சிறு விவசாயிகள் அனைவருக்கும் இலவச மின் சாரம் வழங்கப்படுகிறது.

**எண்ணெய்வித்துத் துறை**

இம்மாவட்டத்தில் 1985-86 ஆம் ஆண்டு காரீப் பருவத்தில் நிலக்கடலை சாகுபடிக்கென நிர்ணயம் செய்யப்பட்ட 0.95 இலட்சம் எக்டேருக்கு 1.17 இலட்சம் எக்டேர் சாகுபடி செய்யப்பட்டு சாதனை புரியப் பட்டுள்ளது. மானாவாரி நிலக் கடலையில் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பயிர் அறுவடைச் சோதனை மேற்கொள்ள ஒதுக்கப்பட்டிருந்த 11 வட்டாரங்களில் பயிர் அறுவடைச்சோதனை முடிவுற்று சராசரி எக்டேருக்கு 1647 கிலோ (ஈர) மகசூல் பெறப் பட்டுள்ளது.

இவ்வாண்டு சேலம் மாவட்டத்திற்கு எண்ணெய் வித்துக்கள் உற்பத்திக்கென நிர்ணயிக்கப்பட்ட 1.3662 இலட்சம் டன்னுக்கு இதுவரை 1.29 இலட்சம் டன் உற்பத்தி செய்து சாதனை புரியப்பட்டுள்ளது.

1985-86-ஆம் ஆண்டு ரபிப் பருவத்தில் சிறு-குறு விவசாயிகள் பயனடையும் பொருட்டு மாபெரும்திட்டத்தில் வட்டாரத்திற்கு ரூ. 26,700 வீதம் இம்மா வட்டத்தில் ரூ. 9.354 இலட்சம் மானியம் வரப் பெற்றுள்ளது.

இம்மாதம் பழம் மற்றும் எரி பொருள் திட்டத்தின் கீழ் 25% மானிய விலையில் 106900 தென்னங் கன்றுகளை ரூ. 187075 மானியத்தில் வழங்கத் திட்டம் வரப்பெற்று, இதுவரை 19500 கன்றுகள் ரூ. 34125 மானியத்தில் 2397 சிறு-குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**அரசு சலுகைகள்:**

1985-86 நிதியாண்டில் ஏற்படும் குறுகிய காலப் பயிர்க் கடன் மற்றும் மத்திய காலக் கடன் நிலுவைகளைத் தவணைத் தேதியில் அல்லது அதற்கு முன் பாகத் திரும்பிச்செலுத்தும், சிறு விவசாயிகளுக்கு 2 சதவிகிதம் வட்டி தள்ளுபடி சலுகை தமிழக அரசு அளித்துள்ளது.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குப் புஞ்சை நில விவசாயத்திற்குச் சோளம், கம்பு, கேழ்வரகு, பருத்தி ஆகிய பயிர்களைச் சாகுபடி செய்பவர்களுக்கு 4 சதவிகிதச் சலுகை வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. டிசம்பர் 1985 திங்கள் முடிய 552 பேர்களுக்கு ரூ. 6.78 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

குண்டு செட்டி ஏரி இடத்தில் பார உந்து வண்டி நிலையம் ஒன்று கட்டும் பொருட்டு மேற்படி ஏரியில் கிழக்குப் புறப்பகுதியிலும் தென்புறப் பகுதியிலும், மண்ணையும் கிராவலையும் கொண்டுநிரப்பி, காலை உயரம் வரை உயர்த்தும் பணிக்கு மதிப்பீடு ரூ. 1,000,000ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளைக்குட்டை ஏரியின் 4.75 ஏக்கரில் ரூ. 5,00,000 மதிப்பீட்டில் அரசு நிதி உதவியுடன் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் அமைக்க நகர மன்றம் அனுமதித்துள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை**

1986 ஜனவரி சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள் மற்றும் போயர்களுக்கு இலவச தொழில் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. சலவைப் பெட்டி எணணிக்கை 59, சவரப் பெட்டி எண்ணிக்கை,4, போயர் கருவிகள் எண்ணிக்கை 7, அவற்றின் மொத்த மதிப்பு ரூ. 25,845.80.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் நடத்தப்படும் 29 மாணவ மாணவியர் விடுதிகள் மற்றும் இரண்டு பள்ளிகளிலுள்ள மாணவ மாணவியருக்குப் பொங்கல் சீருடையாக 1580 மாணவர்களுக்கு (கால்சட்டை 1, சட்டை 1) மற்றும் 285 மாணவியர்களுக்கு (பாவாடை, ஜாக்கெட் மற்றும் தாவணி உட்பட) ரூ. 66,903.50 மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவுத் துறை**

சேலம் மாவட்டத்தில் நுகர் பொருட்கள் 1-4-1985 முதல் 31-12-1985 முடிய காலத்தில் ரூ. 4064.80 இலட்சம் ரூபாய் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் சேலம், ராசிபுரம், திருச்செங்கோடு, நாமக்கல், ஆத்தூர் ஆகியவை இடங்களில் 5 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு அவைகள் மூலம் டிசம்பர் 1985 திங்களில் 1358.316 மெ. டன். விவசாய விளைபொருட்கள் ரூ. 56.72 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1-4-85 முதல் 31-12-85 முடிய காலத்தில் 48118.949 மெ. டன் விவசாயப் விளைபொருட்கள் ரூபாய் 1923.11 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது தவிர ஏர்க்காடு, கொல்லிமலை, அரநூத்துமலை மற்றும் கல்ராயன் மலை ஆகிய இடங்களில் 4 லேம்ப் சங்கங்கள் செயல்பட்டு அப்பகுதிகளில் வாழும் மலை வாழ் மக்களின் நலனுக்காகச் செயல்பட்டு வருகின்றன.

# இலக்கியத்தில் ஓர் இசைப் போட்டி

டாக்டர் சேலம் எஸ்.ஜெயலட்சுமி



இக்காலத்தில் பல இசை நிறுவனங்கள் பலவகையான இசைப் போட்டிகளை வைத்துச் சில நடுவர்களை அமைத்துப் பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்குப் பரிசுகள் வழங்குகின்றனர். இப்போட்டிகளில் சில உண்மையான திறமையாளர்களைத் தேர்ந்தெடுத்து, தக்க முறையில் நியாயம் வழங்குகின்றனர். ஆனால் பெரும்பாலும் இக்காலத்தில் நடுவர்களை அணுகித் தங்கள் தங்கள் போட்டியாளருக்குச் சிபாரிசு செய்து பரிசைக் கவர்வதற்குப் பரவலாகப் பல முயற்சிகள் செய்யப் படுவதும் உண்டு!

ஆனால் அந்தக் காலத்தில் காந்தருவதத்தை நிகழ்த்திய ஒரு போட்டி நூதனமானது. அப்போரில் தலைமை வகித்த நடுவரை இவ்விதம் எவரும் அணுகித் தம் செல்வாக்கை நிலைநிறுத்த முடியாது. ஏனெனில் அந்த நடுவர்கள் ஊழல்களுக்கும் பொய்ப் பித்தலாட்டங்களுக்கும் அப்பாற்பட்டவர்கள். அவர்கள் உண்மையான இனிமையான இசையை விரும்பினரே தவிர, வேறு எந்தப் பொருளையும் பதவியையும் புகழையும் விரும்பவில்லை.

'சீவக சிந்தாமணி' என்ற ஒப்பற்ற காவியத்தில் வரும் யாழ்ப் போரைப் பற்றியும் அங்கே வீற்றிருந்து உண்மையான தீர்ப்பை வழங்கிய நடுவர்களைப் பற்றியும் வரும் ஒரு அரிய காட்சியை இங்கே காண்போம்.

காந்தருவதத்தையின் தந்தை தனது அருமை மகளின் சுயம்வரத்தை - யாழ்ப்போரை அறிவித்துப் பிரகடனம் செய்தான். காந்தருவதத்தை பயின்றது மகரயாழ். யாழ் வகைகளில் பிற பேரியாழ், சகோடயாழ், செங்கோட்டி யாழ் முதலியவை. அவற்றில் பத்தொன்பது நரம்புகளைக் கொண்ட மகர யாழையே பயின்றிருந்தாள் தத்தை. தீந்தொடை மகர வீணையில் காந்தருவதத்தை இனிய இசையை எழுப்பிப் பாடுகையில் இசைக் கலையிலே அவளைக் காட்டிலும் திறம் கொண்ட அரசர் முதலான மூன்று குலத்தில் ஒன்றைச் சேர்ந்த ஆடவன் அவளை வெற்றி கொண்டால் அவனுக்கே தத்தையை மணம் செய்து கொடுப்பேன் என்று அறிவித்தான், தத்தையின் தந்தையான நாய்கன் வண்கைச் சீதத்தன் என்ற அரசன்.

''தீந்தொடை மகர வீணைத்
தெள்விளி யெழுப்பித் தேற்றிப்
பூந்தொடி யரிவை தன்னிற்
புலமிகுத் துடைய நம்பிக்
கிந்திடு மிறைவ ராதி மூவகைக்
குலத்து ளார்க்கும்
வேந்தடு குருதி வேற்கண்
விளங்கிழைதாதை யென்றான்''

இவ்விதம் கட்டியங்காரன் முரசறைந்து செய்தி விடுத்தான். இச்செய்தி பலநாடுகளுக்கும் பரவியது. உடனே தீரமும் வீரமும் மிக்க பலநாட்டு மன்னர்களும் அழகிலும் இசையிலும் சிறந்த காந்தருவதத்தையின் கைத்தலம் பற்றிட ஆவல் கொண்டு தங்கள்தங்கள்பரிவாரங்களோடும் பலத்த ஆரவாரத்தோடும் தத்தையின் நாட்டிற்கு வந்தனர். அத்தினபுரி மன்னன், காம்பிலிக் காவல் மன்னன் பாலகுமரன், வாரணவாசி மன்னன், அவந்தி நாட்டு மன்னன், அயோத்தியாபுரி மன்னன் மற்றும் பலமன்னர் பெருமக்களும் சிறந்த தேனை விரும்பிய தேனீக்களைப் போல் திரண்டு வந்து தத்தையின் ஊரில் இறங்கினர்.

காந்தருவதத்தையின் தந்தை ஏராளமான பொருட் செலவில்- 'நம்மிடம் இவ்வளவு செல்வம் இல்லையே' என்று பிற மன்னர்களும் ஏங்கும் வண்ணம் சிறந்த வகையில் யாழ்ப் போட்டிக்கு ஏற்பாடு செய்கிறான். தத்தையைத் தோழிகள் அணி, மணிகள், ஆபரணங்கள், பட்டுப் பீதாம்பர ஆடைகள் புனைந்து இவள் அழகிற்கு ஈடு வேறு எவரும் இல்லை என்ற வண்ணம் அலங்கரித்து- பொன்னும் மணியும் முத்தும் இழைத்து அலங்காரம் செய்த பொன் மண்டபத்திற்கு அழைத்து வருகின்றனர்.

இக்கொலு மண்டபத்திற்கு இரண்டடி உயரம் உள்ள குறளர் என்போரும் மூன்றடி உயரமுள்ள சித்தர் என்போரும் முன்னே நடக்க, வில்லும்வாளும் ஏந்திய காவல் மகளிர் ஆயிரத்தெட்டுப் பேர் கட்டியங்கூறி முன்னே செல்ல, ஆங்குக் கூடியிருந்த விண்ணவரும் விச்சாதரும் மண்ணிலுள்ளாரும் எள் விழ இடம் இன்றி நெருக்க, காந்தருவதத்தை திருமகள் போலத் தோன்றினாள். கண்டவர்கள் நாங்கள் கண்ணினோடு பிறந்தது தத்தையின் வண்ணம் காண்பதற்கேயன்றோ என்று கூறி வியந்தனர். காந்தருவதத்தையின் கரம்பற்றலாம் என்ற ஆவலோடு வந்திருந்த மாமன்னர்கள் தத்தையின் அழகைக் கண்டு, 'இவள் தாமரை மேல் உறையும் திருமகளோ, வித்தியாதர மகளோ அல்லது தேவமகளோ' என்று திகைத்தனர்.

''செய்ய தாமரை மேற்றிரு
வேகொலோ
வெய்ய நோக்கின் விச்சாதரி
கொலோ
மையில் வானவர் தம்மகளே
கொலென்
றைய முற்றலர் தார்மன்னர்
கூறினார்''

இப்பெண்ணின் நல்லாளை எவ்விதமும் நான்பெற வேண்டும் என்று ஒவ்வொரு மன்னனும் தன் மனதில் உறுதிகொண்டான்.



பைம்பொன்னை நிகர்த்த நிமிர்கொடிப்பாவை வனப்புடன் அன்னம் போல் நடந்து மண்டபத்தின் நடுவே பட்டுத் திரைகளால் வளைத்துக் கட்டப்பட்டு பல மலர்களால் ஆன மாலைகளைத் தாங்கி, மணம் நீங்காத சாந்தினால் மெழுகப் பெற்ற நிலத்தில் மெல்லிய பூக்களைத் தூவி அகிற்புகையிட்டு இமைகளிற் புகழ்பாட, வானவர் இளமங்கை போல் வந்து மேடைமீதுஅமர்ந்து நல்யாழைத் தொட்டு மீட்டிப் பண்ணையெழுப்பி நரம்பைத் தெறித்தாள். அவ்வளவுதான்— கின்னரரும் தம்மை மறந்து சோர்ந்தனர்.

தெய்வப்பாவைபோல் திகழ்ந்த காந்தருவதத்தை கலைத்தொழில் பொருந்த யாழை மீட்டிக் கொண்டு அதற்குத் தக்கவாறு இசை பாடினாள். பொழிலில் இலைகளும் தழைகளும் உருகின. பட்டமரங்கள் துளிர்த்தன. கின்னரமிதுனம்என்ற பறவைகள் தம்மை மறந்து நிலத்திடை வீழ்ந்தன.

கின்னரமிதுனம்என்பதுஒன்றையொன்று பிரியாத இசையறிவிற் சிறந்த ஆணும் பெண்ணுமான இரட்டைப் பறவைகள்!

''சிலைத்தொழிற் சிறுநுதல்
தெய்வப் பாவைபோல்
கலைத்தொழில் பட எழீஇப்
பாடினாள் கனிந்
திலைப் பொழில் குரங்கின
ஈன்ற தூண் தளிர்
நிலத்திடைப் பறவை
மெய்ம்மறந்து வீழ்ந்தவே''

இங்கு காந்தருவதத்தை இசை இலக்கண நூல் மரபிற்கேற்பப் பாடுகின்றாள். புருவங்களை நெரிக்காமல், கயல் நெடுக்கண்கள் உருண்டு ஆடாது, மிடறு வீங்காமல், முத்தனைய பற்களை வெளியே காட்டாமல், இவள் பவளச் செவ்வாயைத் திறந்து பாடினாளோ அல்லது நரம்புக் கருவியாகிய வீணையே பாடுகின்றதோ என்று வியக்குமாறு பாடினாள்!

''கருங்கொடிப் புருவ மேறா
கயல்நெடுங் கண்ணு மாடா
வருங்கடி மிடறும் விம்மா
தணிமணியெயிறுந் தோன்றா
விருங்கடற் பவளச் செவ்வாய்
திறந்திவள் பாடினாளோ
நரம்பொடு வீணை நாவி
னடந்ததோ வென்று நைந்தார்''

காந்தருவதத்தை இங்ஙனம் பாடியபின் இசைப் போருக்கு வந்திருந்த மன்னர்கள் அவளை எப்படியேனும் இசையில்வென்று தாம் அடைய வேண்டும் என்ற ஆத்திரத்தில் உச்சக்குரலெடுத்துப் பாடவும் தத்தையின் இசையில் மயங்கி வீழ்ந்திருந்த பறவைகள் விருட்டென்று எழுந்து பறந்து வெளியே ஓடின.

''இசைத்திறத்து அனங்கனே
யனைய நீரினார்
வசைத்திற மிலாதவர்
வான்பொன் யாழெழீஇ
விசைத்தவர் பாடலின்
வெருவிப் புள்ளெலாம்
அசிப்ப போன்றிரு விசும்
படைந்த வென்பவே''

பறவைகள் படபடவென்று அடித்துக் கொண்டு பறந்து சென்று சப்த மிட்டது, இம் மன்னர்களைப் பார்த்துப் பரிகசித்தது போலாயிற்றாம்! மீண்டும் தத்தை யாழைத்தடவிப் பாடியதும் கின்னரங்கள் உள்ளே வந்து அமர்ந்தன. மற்றும் மன்னர்களாகிய மைந்தர் கைகீதத்தால் மீண்டும் விரட்டப்பட்டு வெளியே சென்றன. காந்தருவதத்தை மீண்டும் அவை உள்ளே வருமாறு பாடினாள்.

இங்ஙனம் யாழ்ப் போரில் தத்தையை வெல்லும் தகுதியை ஒருவரும் பெறாதவராய் மன்னர்கள் அனைவரும் ஏமாந்து அல்லலுற்றனர். கின்னர மிதுனங்களின் பாரபட்சமற்ற தீர்ப்

பினால் காந்தருவதத்தை தன்னைத் தோற்கடித்துக் கைப் பிடிப்பார் எவரும் இல்லாது இருந்தாள்.

இவ்வாறு நிறைமதியை இராகு பீடித்தாற் போலப் பொலி விழந்து மன்னர்கள் வாட ஆறு நாட்கள் சென்றபின் அவ்வூரின் வணிகன் ஆதிநாய்கன் மகனாகிய சிங்கத்தை ஒத்த வீரம் கொண்ட சீவகசாமி என்பவன் யாழ்ப்போருக்குத் தயாராக வந்தான். சீவகன் அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லவன். சிங்கத்தை நிகர்த்த பலம் கொண்டவன். யானைகளை அடக்க வல்லவன். குணத்திலும் நற்பண்பாட்டிலும் ஈடு இணையற்றவன்.

அரச சபையை அடைந்த சீவகனிடம் தத்தையின் தோழி, யாழை எடுத்து வந்து கொடுத்தாள். சீவகன் பல யாழ்களைக் குற்றமுள்ளவை என்று தள்ளி, அவள் சிறந்த குற்றமற்ற யாழைக்கொண்டுவந்த பின்னரே அதையேற்று இசைத்தான். இங்ஙனம் விண்ணவரும், விஞ்சையரும், மானுடரும் சீவகனுடைய யாழிசையையும் மிடற்றுப் பாடலையும் கேட்டு மெய்ம் மறந்தனர். வானில் பறவைகளும் இசையில் மயங்கி வீழ்ந்தன. காமனும் வெட்கிப்போகும் படியான அழகுடன் சீவகன் பாடினான். வந்திருந்த மன்னர்கள் திகைத்து, எழுதிவைத்த பாவைகள் போல் அமர்ந்திருந்தனர்.

இவர்கள் இந்நிலையை எய்த, நமது இசைவல்லுநராகிய நடுவர் கின்னர மிதுனங்களும் தமது நேர்மையான தீர்ப்பை வழங்கின. புள்ளாகிய கின்னரப் பட்சிகளும் அசுணமா என்ற பறவையும் இசையில் மயங்கிச் சோர்ந்து வீழ்ந்தன!

அசுணமா என்ற ஒரு பறவையைப் பற்றி சங்க இலக்கியம் கூறும். இனிமையான சுஸ்வரமான இசையை லயித்துக்கேட்டுக் கொண்டிருக்கும் அசுணமா என்ற பறவை திடீரென்று பறையை முழக்கிப் பெரும் சப்தத்தை உண்டாக்கினால் கீழே வீழ்ந்து செத்து விடுமாம்! வேட்டையாடுபவர்கள் இந்த ரகசியத்தைத் தெரிந்துகொண்டு இசையாலும் பின்னர் பேரிரைச்சலாலும் அதை மடியச் செய்து பிடித்து விடுவார்கள்!

இங்கு சீவகனுடைய தேவகானத்தைக் கேட்டு கின்னரப் பட்சிகளும் அசுணமாவும் மயங்கியிருந்தன!



**எங்கள் அடி ஒவ்வொன்றும் அமரர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டது போல அளவான ஸ்திரமாக முறையில் வைக்கப்படுவதாகும் என்பதை அடக்கத்தோடு சொல்லிக் கொள்வதிலே நான் பெருமைப்படுகிறேன். பதவிச் சுவை எங்களுக்குப் பெரிதல்ல. எம் கடன் பணி செய்து கிடப்பதே என்பதைச் சொல்லிக் கொள்வதில் நான் பெருமிதம் அடைகிறேன்!**

**—மாண்புமிகு முதல்வர்**
**டாக்டர் எம்.ஜி.ஆர்.**

பறவைகளில் கின்னரமும் விலங்குகளில் அசுணமுமே இசையறிவிற் சிறந்தன என்று கூறப்படுகிறது. அசுணத்தைச் சிலர் பறவையென்றும் சிலர் விலங்கு என்றும் கூறுவதாக நூல்களில் குறிக்கப்பட்டுள்ளன. சீவகன் குரல்குரலாக வரும் செம்பாலையை யாழில்இட்டு வாசித்து மிடற்றிசையாலும் மிகத் திறமையோடு பாடுகின்றான்.



பருந்தும் நிழலும்போல் சீவகன் பண் ஆளத்தி செய்தான். இராக ஆலாபனையைப் பருந்து எவ்விதம் படிப்படியாக உயரத்தில் பறந்து அங்கு ஓர் வட்டமிட்டு மேலும் உயரப் பறக்குமோ அதே போல் வலிவு, மெலிவு, சமன் என்ற மூன்று ஸ்தாயிகளில் கீழிருந்து படிப்படியாக விரிவுபடுத்திப் பாடுகின்றான். சீவகனிடம் காந்தருவதத்தை மனதைப் பறிகொடுத்தவளாய் அடுத்து யாழை இசைக்கத் தொடங்குகிறாள்.

''பருந்து நிழலும்போற்
பாட்டு மெழாலும்
திருந்துதார்ச் சீவகற்கே
சேர்ந்தன என்றெண்ணி
விருந்தாக யாழ் பண்ணி
வீணைதான் தோற்பாள்
இருந்தாள் இள்மயில் போல்
ஏந்திலை வேற்கண்ணாள்''

வாசவதத்தை யாழ்ப்போரில் தோற்பதற்குத் தயாரானவளாய் நாணமும் காதலும் மேலிடப் பாடத் தொடங்கினாள். உணர்ச்சி வசப்பட்டவளாய் தத்தை பாடத் தொடங்கி மேல் ஸ்தாயியில் சஞ்சரிக்கும் போது குரல் நடுங்கிப் போக இசைப் போட்டியில் தோற்றாள்.

''பண்ணொன்று பாடலது
வொன்று பல்வளைக்கை
மண்ணொன்று மெல்விரலும்
வாள்நரம்பின் மேல்நடவா
விண்ணின்றியங்கி மிடறு நடுநடுங்கி
எண்ணின்றி மாதர்
இசைத்தோன்றிருந்தனளே''

தன்னிலும் சிறந்தவன் சீவகன் என்று உணர்ந்தமையால் தத்தைக்கு இயல்பாகவே நடுக்கம் உண்டாயிற்று. தன்னை வென்று அவன் மணமாலை சூட்டப் போவதையும் எண்ணி அகமகிழ்ந்து அவனுடைய பெருமையையும் தனது தோல்வியையும் ஒருங்கே ஏற்றுக் கொண்டு தனது காற்சிலம்புகள் மெல்லென்றரற்ற மேகலைகள் ஒளி வீசவும் பெடை அன்னம் போல நாணத்துடன் அடிஎடுத்து,கையில் இருந்த செம்பொன் மாலையைச் சீவகன் கழுத்தில் இட்டு அவனை தன் மணவாளனாக ஏற்றுக் கொண்டாள்.

இங்ஙனம் யாழ்ப்போர் வெற்றிகரமாக முடிவடைந்தது. இக்காலத்திலும் கின்னர மிதுனங்களைப் போன்ற - அசுணமா போன்ற பாரபட்சமற்ற நடுவர்கள் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! ●

சுய வேலை வாய்ப்புத் திட்டம்



# ஈயம் பூசியவர் பாத்திர வியாபாரியானார்

ஜி. டி. மோகன், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், இராமநாதபுரம் மாவட்டம்.

ஆன்மீக உயர்வுக்கு அருள் தரும் தலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திரு உத்தரகோசமங்கை. அங்கு இந்திராபுரத்தில் வாழும் பிச்சை, குருசாமி என்பவரின் மகன். கிராமியக் கைவினைஞர் குடும்பத்தைச் சேர்ந்த பிச்சை, வீதி வீதியாகச் சென்று ஈயம் பூசி தனது பிழைப்பை நடத்தி வந்தார். நான்கு ரூபாய் வரைதான் நாளொன்றுக்கு அத்தொழில் மூலம் ஊதியம் கிடைக்கும். இதில் அவர் குடும்பத்தில் உள்ள நான்கு பேர் உயிர்வாழ வேண்டும்.

தமிழக அரசின் புதிய பொருளாதாரத் திட்டம் ஏழை மக்களுக்கு உதவ உதயமானதால், அதன் பயனை அடைய அவர் முயன்றார். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் திரு உத்திரகோசமங்கையில் இருக்கும் பாண்டியன் கிராமிய வங்கியில் 3,000 ரூபாய் கடனுதவி பெற்றார். சிறு தொழில் செய்ய பிச்சை இக்கடனை வாங்கினார். அவர் இப்போது அலுமினியப் பாத்திரங்களை மொத்தமாக வாங்கி, சைக்கிள் மூலமாகக் கிராமங்களுக்குச் சென்று விற்பனை செய்து வருகிறார்.

நாள்தோறும் செலவு போக 15 ரூபாய் கிடைக்கிறது. மாதம் 450 ரூபாய் வருமானம். வங்கிக் கடன் தவணை 100 ரூபாய் மாதந்தோறும் செலுத்தி வருகிறார். மேலும், நாட்டுப் பன்றிகள் மூன்று வாங்கிவளர்த்து வருகிறார்.

வருமானம் மூன்று மடங்கிற்கு மேல் பெருகியதால் பிச்சை வாழ்வில் இப்போது பெருமிதம் தோன்றியுள்ளது. அமைதியாகக் குடும்பத்தை நடத்தி அளவோடு வாழ்ந்து வருகிறார். இன்று ஏழைகள் வாழ்விற்கு ஏற்றம் தருகிறது தமிழக அரசின் நல்வாழ்வுத் திட்டங்கள் என்பதற்கு இவர் வாழ்க்கை ஓர் உதாரணம்.

---

ஏராளமான மக்கள் இக்காலத்தில் எப்படிப்படிப்பது என்பதை அறிந்து கொண்டார்கள். ஆனால் எதைப்படிப்பது என்பதைத்தான் அறியவில்லை.

—டிரெவிஷியான்

மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கிப் பாயுந் தண்ணீர் மறுபடியும் மேட்டிற்கு வருவதில்லை, அப்படித்தான் காலமும் ஒருமுறை சென்றுவிட்டால் திரும்பாது.

—சலார்

நம்மிடையே தீண்டாமையும், சம ஜாதியமும் உலவும் வரை சமதர்மமோ, ஜனநாயகமோ தழைக்க முடியாது. நாடு முன்னேற இக்கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும்.

—பண்டித நேரு

# அந்தநாள் ஞாபகம்


## ஏவி. எம். சரவணன்.

**சென்னை மாநகர ஷெரீப்**


நோஸ்டால்ஜிக் மெமரீஸ் என்று சொல்வார்களே, ''அந்த நாள் ஞாபகம்'' சற்று வருகிறது.

அப்போது மைலாப்பூரில் துவாரகா காலனியில் நாங்கள் வசித்து வந்தோம். எனது பெரிய சகோதரர்கள் கட்டாயமாகப் பள்ளிக்கூடத்திற்குக் கடத்தப்படுவார்கள். தந்தை ஸ்டுடியோவுக்குப் போய்விடுவார். என் தாயாரும் நானும் தான் வீட்டில் இருப்போம். எனக்கு அப்போது நாலு வயது.

பல காரணங்களுக்காக அம்மாவுக்கும், எனக்கும் அடிக்கடி சண்டை வரும். அப்போதெல்லாம் எனக்குத் தெரிந்த டயலாக் ஒன்றே ஒன்றுதான்: ''உன்னைக் கவனிச்சுகிற மாதிரி கவனிச்சுக்கிறேன்.'' வீரமாகப் பேசிவிட்டு நேராக வீட்டைவிட்டு வெளியே ஓடி வருவேன்.

நான் இவ்வாறு சொன்னாலே, அம்மாவுக்குக் குலைநடுக்கம். அம்மாவுக்குப் பூஞ்செடி, தோட்டம் என்றால் மிகவும் பிடிக்கும். தோட்டத்திற்கு வந்து செடிகளில் நிறைய தண்ணீர் ஊற்றி அவற்றைப் பிடுங்கி, தலைகீழாக அதாவது இலைகள் பூமிக்கு உள்ளேயும் வேர் மேலேயும் இருக்கும்படி நட்டுவிட்டு ''உன்னுடைய மரம் எல்லாம் சீக்கிரம் வளரும் பார்'' என்று சொல்லிவிட்டு ஓடி விடுவேன்.

அம்மாவை முறைப்பதற்கு, அல்லது அவர்மேல் எனக்கு இருக்கும் கோபத்தை வெளியே காட்டுவதற்கு எனக்கு அப்போதெல்லாம் மற்றொரு வழியும் இருந்தது.

அம்மா இருக்கும்போது பாத்ரூம் கதவிற்கு வெளிப்பக்கம் தாழ்ப்பாள் போட்டுவிடுவேன். சகோதரர்களும் இல்லை; வேலைக்காரர்களும் அருகே இல்லை என்று தெரிந்த பிறகு தான் இப்படிச் செய்வேன். உள்ளேயிருந்து அம்மா கெஞ்சுவார், கொஞ்சுவார்.

''இனிமே என்னைஅடிப்பியா? அப்பச்சிக்கிட்டே சொல்லிக் கொடுப்பியா?'' என்றெல்லாம் மாற்றி, மாற்றி, ஜாக்கிரதையாக இரண்ய கசிபு வரம் கேட்ட மாதிரி கேட்பேன்.

''இனிமேல் அப்படிச் செய்ய மாட்டேன்'' என்று அம்மாவும் பதிலுக்கு உத்தரவாதம் அளிப்பார்கள். வேறு வழி! வெளியே என் உதவி இல்லாமல் வரமுடியாதே!

பாத் ரூம் கதவைத் திறப்பதற்கு முன் கடைசியாக அம்மாவிடம் ஒரு உத்தரவாதம் கேட்பேன்—

''இப்போ நான் கதவைத் திறந்ததும், என்னை அடிக்க மாட்டாயா?''

அதற்கும் 'சரி' என்றுதான் தாயார் கூறுவார். நானும் அதை முழுமையாக நம்பிவிட மாட்டேன். கதவைத் திறந்ததும் ஓட ஆரம்பிப்பேன். இருக்கும் கோபத்தில் எது கிடைத்தாலும் அதை வைத்து என்னை அடிக்காமல் என் தாயார் விட்டதில்லை!

இரண்டு தடவை இவ்வாறு அம்மாவை மடக்கியிருப்பேன். மூன்றாவது முறை எனது 'பாச்சா' பலிக்கவில்லை - காரணம் தந்தையிடம் சொல்லி பாத்ரூமிற்கு வெளிப்புறத் தாழ்ப்பாளை எடுத்துவிட்டார்கள்.

இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது!



வறுமையைப்புகழ்வது எனக்குப் பிடிக்கவில்லை. வறுமை கொடிய விரோதியாக என் கண்களில் படுகிறது. வறுமையை அழிக்கப் போராட வேண்டியது உன் கருமமாகும்.

—பண்டித நேரு

சிறுவர்களாக இருந்தபோது நாங்கள் அதிகம் வெளியே போக மாட்டோம்; நண்பர்கள் வீட்டுக்குப் போகிறோம் என்று சொல்லி வெளியே கிளம்ப மாட்டோம்; பல நண்பர்கள் எங்கள் வீட்டுக்கு வருவார்கள்.

சைக்கிள்கூட வீட்டுக்குள்ளேயே ஓட்டுவோம்.

எங்கள் பெற்றோர் அந்த மாதிரி எப்படி எங்களைக் கண்ட்ரோல் பண்ணி வளர்த்தார்கள் என்று புரியவில்லை. 'கண்ட்ரோல்' இருந்தும், ஏதோ சுதந்திரம் பறிபோனதாக நாங்கள் நினைத்ததே இல்லை. இப்போது எங்கள் குழந்தைகளை நாங்கள் எங்களுக்குத் தெரிந்தவரை வளர்த்திருந்தாலும், என் பெற்றோர்களுடைய 'டெக்னிக்குகள்' வளர்ப்புமுறை எங்களுக்குத் தெரியவில்லை.

சிறிய வயதில் சினிமாவிற்குப் போவது என்பதே பெரிய விஷயம்.

ஞாயிற்றுக் கிழமை சற்று 'லீஷராக' ஓய்வாக நல்ல 'மூடில்' தந்தை இருக்கிறாரா என்று முதலில் எங்களில் யாராவது ஒருவர் பார்த்துவிட்டு வருவோம். மூவரும் சேர்ந்து தந்தையிடம் செல்லுவோம். நாங்கள் அப்படி வருவதைப் பார்த்ததுமே அவருக்கு விஷயம் புரிந்துவிடும். ஆனாலும் புரியாததைப் போல, ''என்னப்பா, என்ன மேட்டர்'' என்பார்.

''ஒன்றுமில்லை!''

''அப்போ 'ப்ரீயா' இருந்தீங்கன்னா உடம்பை அமுக்கி விடறீங்களா?''

''ஓ. தாராளமாக...''

தலை, முதுகு, கால் என்று மூவரும் தனித் தனியாக அவரைப் பிடித்து விடுவோம்.

சற்று நேரம் கழிந்ததும்(எங்களைக் கொஞ்சம் வேலை வாங்கியதும்) 'என்னப்பா, என்ன விஷயம்?' என்று மீண்டும் கேட்பார்.

# உருளைக் கிழங்கின் கதை



தென் அமெரிக்காவில் ஆண்டியன் வெப்ப மண்டல மலைப்பிரதேசத்தில் உருளைக் கிழங்கு முதலில் பயிரிடப்பட்டது. அங்கு இப்பொழுதுகூட பல வடிவம், வண்ணம் உடைய உருளைக் கிழங்குகளைக் காண முடியும். தென் அமெரிக்காவின் முக்கிய உணவுப் பொருளாக உருளைக் கிழங்கு உள்ளது. அவர்கள் அதனைப் பல வகைகளில் பயன்படுத்துகிறார்கள்.

16-ஆம் நூற்றாண்டில் ஸ்பானியர்கள் உருளைக்கிழங்கை ஐரோப்பாவுக்குக் கொண்டு வந்தனர். அடுத்த 50 ஆண்டுக் காலத்தில் போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவில் உருளைக் கிழங்கை அறிமுகப்படுத்தினார்கள்.

இந்தியாவில் 1615-1617-ஆம் ஆண்டுகளில் கிழக்கிந்தியக் கம்பெனியுடன் தொடர்புள்ள எட்வர்டு டெர்ரி என்ற பாதிரியார் இந்தியாவின் வடக்குப் பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்தபொழுது, உருளைக் கிழங்கு ஏராளமாகப் பயிரிடப்படுவதைப் பார்த்ததாகக் கூறியுள்ளார்.

கிழங்கு வகைகள் இந்தியாவில் முக்கிய உணவுப் பொருள்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவை பல்வேறு விதமான மண்களிலும் விளையக்கூடியவை ஆகும். இவைகளில் கார்போஹைடிரேட் ஏராளமாக உள்ளது. பல தாதுப்பொருள்களும், விட்டமின்களும் உள்ளன. கால்நடைத் தீவனமாகவும், சாராயம், சர்க்கரை தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

தற்பொழுது 12 மத்திய உருளைக் கிழங்கு ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. அகில இந்திய ஒருங்கிணைந்த உருளைக் கிழங்கு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இவைகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

இந்தியப் புவியியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மேம்பாடு செய்யப்பட்ட 23 உருளைக் கிழங்கு வகைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்கள்: சந்திரமுகி, ஜோதி, சந்தூரி, பஹார், பாவ்ஷா, லாலிமா ஆகியவை ஆகும்.

ஆய்வு நிறுவனங்கள் ஆண்டொன்றுக்கு 2000 டன்கள் கலப்பின விதை உருளைக் கிழங்குகளை விநியோகம் செய்கின்றன. அதனால் உற்பத்திச் செலவு கணிசமாகக் குறைகிறது. பல்வேறு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர, தொட்டிகளில் உருளைக் கிழங்கு பயிரிடும் முறையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; இது ஒரு புதிய சாதனையாகும்.

—பத்திரிகைத் தகவல் அலுவலகம்

யார் எங்கள் சார்பில் பேசுவது என்று தயக்கம்.

''சினிமாவுக்குப் போகலாம்னு நினைக்கிறோம்''.

''அப்படியா, ஹிந்து பேப்பரைக் கொண்டு வா.'' நாங்கள் அப்பொதெல்லாம் சில குறிப்பிட்ட படங்களைத்தான் பார்க்க முடியும். மற்ற படங்களைப் பற்றி நாங்கள் நினைத்தது இல்லை.

லாரல் ஹார்டி, படாபட் காஸ்டெல்லோ, காமெடி படங்கள், எரால் பிலைன், டைரன் பவர் நடித்த ஆக்ஷன் படங்கள், த்ரீ மஸ்கீடியர்ஸ், பிளட் அன்ட் ஸான்ட், கோவாடிஸ் போன்ற கிளாஸிக் படங்கள். இன்விசிபிள் போன்ற சயின்டிபிக் படங்கள்தான் நாங்கள் பார்க்க அனுமதிக்கப்படுவோம்.

இவற்றில் ஒரு படமாகப் பார்ப்பதாக இருந்தாலும் அதற்கும் சில விதிகள் இருக்கும். ஸ்கூல் இல்லாத லீவு நாளாக இருக்க வேண்டும். தவிர கிளாஸ் டெஸ்ட் சமீபத்தில் வரக்கூடாது.

அப்போது அதிகமாக நாங்கள் போகக்கூடிய தியேட்டர்கள் சில தான்! மினர்வா, காஸினோ, மிட்லண்ட்.—

நான் பள்ளிச் சிறுவனாக இருந்தபோது மயிலாப்பூரில் தங்கி வந்தோம். அப்போதுதான் 'வாழ்க்கை' படத்தை எடுத்து முடித்திருந்தார் என் தந்தை.

அப்போதெல்லாம் நாங்கள் அதிகமாக ஸ்டுடியோ பக்கம் போக மாட்டோம். செட்டுக்குப் போவதில்லை. போகக்கூடாதென்று தடையேதும் இல்லை. இருந்தாலும் எங்களுக்கு ஸ்டுடியோவிற்கு வருவதில் அவ்வளவு நாட்டம் ஏற்படவில்லை.

ஏவி.எம்.ஸ்டுடியோவில் இப்போதிருக்கும் ஆர்.ஆர். தியேட்டர் எனப்படும் ரீ-ரிகார்டிங் தியேட்டர் ஒன்றுதான் அப்போது உண்டு. அதிலேயே டப்பிங், ரிகார்டிங், புரொஜக்ஷன் எல்லாம் நடக்கும்.

படமெடுத்து முடிந்தவுடன் குடும்பம் முழுவதற்கும் அந்தப் படத்தைப் போட்டுக் காட்டி, அதில் எங்களுக்குத் தென்படும் குறைகளைச் சொல்லும்படி கேட்பார்.

இன்றைக்கு நாங்களெல்லாம் பிறர்கண்ணில் படும்படி பெருமையாக வளர்ந்திருக்கிறோம் என்றால்... எங்கள் பெற்றோர் இப்படியெல்லாம் வளர்த்த விதம் தான் மூலகாரணமே தவிர, நிச்சயமாக நாங்கள் மட்டுமே அல்ல!



# மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் ஸ்கேனர் கருவி



ஸ்கேனர் கருவி

மதுரை மாநகராட்சி திருமண மண்டபங்கள் திறப்பு விழா ராஜாஜி அரசு மருத்துவமனை புதுக்கட்டடத் திறப்பு விழா மற்றும் நவீன மருத்துவக் கருவிகள் இயக்க விழா 22-1-86 அன்று மதுரை மருத்துவக் கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெற்றது.

மதுரை மாநகராட்சியினரால் கட்டப்பட்டுள்ள பன்னிரெண்டு திருமண மண்டபங்களையும், மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் உடல் முழுவதும் படம் பிடித்துக் காட்டும் மின்னணுக்கருவி ( Whole body C.T. Scanner), செயற்கை சிறுநீரகச் சிகிச்சைக் கருவி (Hoemo-dialyser), மற்றும் மூளை நரம்பு மின் அலைப் பதிவுக் கருவி (Neuro EEG Evoked Potential Recording unit) ஆகிய மூன்று நவீன சிகிச்சைக் கருவிகளையும், புதிய பல், எலும்புமுறிவு மற்றும் செயற்கை உறுப்புக்கள் பொருத்தும் மையக் கட்டிடத்தையும் (Ortho-Dental Block and Artificial Limb fitting and Rehabilitation centre) மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர்., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

12 திருமண மண்டபங்கள் மொத்தம் ரூ. 54.00 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்

என. ஒவ்வொரு திருமண மண்டபத்திற்கும், நாள் ஒன்றுக்கு வாடகை ரூ. 450 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திருமண மண்டபங்களுக்குத் தமிழ்ப் புலவர்களின் பெயர்களை மாண்புமிகு முதல்வர் சூட்டினார்கள். அங்கயற்கண்ணி, தமிழ் வைகை, நக்கீரர், மாங்குடி மருதனார், சுந்தரபாண்டியன், தேன்மொழி, தென்றல், பொன்முடி, கபிலர், பரணர், பொன்மனம், அழகர் ஆகிய பெயர்கள், திருமண மண்டபங்களுக்குச் சூட்டப்பட்டன.

மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள உடல் முழுவதும் படம் பிடித்துக் காட்டும் மின்னணுக் கருவி தென்னகத்திலேயே அரசு மருத்துவமனைகளில் அமைக்கப் பட்டுள்ள முதலாவது கருவியாகும். உடலின் ஒவ்வொரு 2 மி.மீ. பகுதியிலும் உள்ள நோய்களைத் துல்லியமாகக் கண்டு பிடிக்க முடியும். இந்த மின்னணுக் கருவி ரூ. 85 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

விழாவிற்குத் தலைமை வகித்த உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு ப.உ. சண்முகம் அவர்கள் பேசும்போது, "மதுரையின்மீது முதல்வருக்கு எப்போதும் தனி மரியாதை உண்டு. அதனால்தான் சென்னை அரசு



ஸ்கேனர் கருவியை மாண்புமிகு முதல்வர் தமது துணைவியாருடன் பார்வையிடுகிறார். மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச்.வி. ஹண்டே உடன் உள்ளார்.




மருத்துவமனையில் கூட இல்லாத நூதனக் கருவிகளை மதுரைக்கு வழங்கியுள்ளார். தமிழைச் சிலர் தங்களுக்குச் சொந்தம் எனக் கருதுகிறார்கள். ஆனால் தமிழுக்கு உயிரூட்ட மதுரையில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடத்தினார். அடுத்து தமிழ்ச் சங்கத்தை உயிர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளார். வரும் ஏப்ரலில் உலகத் தமிழ்ச்சங்கத் துவக்கவிழா நடைபெற உள்ளது. அப்போது முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் தமிழ்ச் சங்கத்தைத் துவக்கி வைத்து உரையாற்றுவார்கள். இந்தத் தமிழ்ச் சங்கம் தமிழ்ப் புத்தாண்டுத் தினத்தில் தொடங்கும்'' எனக் கூறினார்.

மலர் வெளியிட்டுச் சிறப்புரையாற்றிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் பேசும்போது, ''தலையை மட்டும் படம் பிடித்துக் காட்டும் ஸ்கேனர் கருவி மதுரை மருத்துவமனைக்கு வேண்டும் என நல்வாழ்வுத்துறை சார்பாக முதல்வரிடம் கேட்டோம். ஆனால் நாம் கேட்டதை விடக் கூடுதலாக - உடல் முழுவதும் படம் பிடித்துக் காட்டும் ஸ்கேனர் கருவியை அமைக்க முதலமைச்சர் உத்தரவிட்டார்கள்'' எனக் கூறினார்கள்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராஜுலு இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். மாநகராட்சி ஆணையர் திரு மா. தேவராஜ், இ.ஆ.ப., அறிக்கை வாசித்தார். மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் லலிதா காமேஸ்வரன், தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) திரு என். பாலசுப்பிரமணியன், நாடாளு மன்ற உறுப்பினர் திரு ஏ. ஜி. சுப்புராமன் ஆகியோர் உரையாற்றினர். ராஜாஜி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் கே. ஆர். ஜேக்கப் நன்றி கூறினார்.

# கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 25 ஆண்டு வளர்ச்சி

நா. கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப., தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

'இந்தியா கிராமங்களில் தான் வாழ்கிறது' என்றார் அண்ணல் காந்தி அடிகள்.

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்றார் மகாகவி பாரதி.

''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றார் பேரறிஞர் அண்ணா.

'அண்ணல் காந்தியடிகளின் கனவின் பலனாய் மலர்ந்த கதர் கிராமத் தொழில்கள், 1956ஆம் ஆண்டு சென்னை அரசால் தனித் துறையாக ஆரம்பிக்கப்பட்டுச் செயல்படத் தொடங்கியது. பின்னர் 1960-ஆம் ஆண்டு 'தமிழ்நாடுகதர் கிராமத்தொழில் வாரியம்' என்ற பெயருடன் செயல்படத் தொடங்கியது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்களின் ஆக்கமிகு ஊக்கத்தினாலும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இன்று ஆல மரம் போல் தழைத்து வளர்ந்துள்ளது. இவ்வாரியம் தனது வெள்ளி விழாவை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் அக்டோபர் '85-ல் சீரும் சிறப்புமாகக் கொண்டாடியது. சமுதாயத்தின் அடித் தளத்தில் ஒருவேளை உணவுக்குக் கூட வழியின்றி வறுமையில் வாடும் ஏழை எளிய மக்களுக்கு 25 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து பணியாற்றி வருவதில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பெருமைப்படுகிறது.

பம்பாய் கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ள 27 கதர் கிராமத் தொழில்களில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 18 தொழில்களைத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்படுத்தி வருகிறது:

1. கதர் 2. பதநீர் 3. எண்ணெய் 4. வெல்லம் மற்றும் கந்தசாரி சர்க்கரை 5. தேனீ வளர்த்தல் 6 உணவிற்குப் பயன்படா எண்ணெய் மற்றும் சோப்பு 7. தானியம் பருப்பு வகைகளைப் பதப்படுத்துதல் 8. மண்பாண்டத் தொழில் - செங்கல் 9. தச்சு வேலை-இரும்புவேலை 10. தோல் 11. நார் 12. கையால் செய்யும் காகிதம் 13. சுண்ணாம்பு உற்பத்தி, 14. பழச்சாறு தயாரித்தல்-பராமரித்தல் 15. பிரம்பு, மூங்கில் 16. அலுமினியப் பாத்திரங்கள் தயாரித்தல் 17. அகர்பத்தி, 18. பாலிவஸ்திரா லோக் வஸ்திரா.

இவை தவிர சீயக்காய்த் தூள், பல்பொடி, நீலகிரித் தைலம், எலுமிச்சைப் புல் தைலம் ஆகிய வற்றையும் இணைத்துத் தமிழ் நாடு அரசு ஆணை வழங்கியுள்ளது.

இன்று இவ்வாரியத்தின் கீழ், தமிழ்நாட்டில் கிராமிய நூற்புக் கூடங்கள் 566, கதர் மற்றும் பட்டு ரகங்களை உற்பத்தி செய்யும் நிலையங்கள் 98, சலவை மற்றும் சாயமிடும் நிலையங்கள் 5, காதி கிராப்டுகள் 156 இயங்கி வருகின்றன. 31-3-85-ல் உள்ள புள்ளி விவரப்படி 249 கிராமத் தொழில் அலகுகளும் 1,267 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களில் 304-ல் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறது. 1. துறைப் பிரிவு. 2. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், 3. தனி நபர் அலகுகள் ஆகியவற்றின் மூலம் இத்திட்டங்கள் விரிவாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பம்பாயிலுள்ள கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக்குழு ஒவ்வொரு ஆண்டும் நிதி உதவி அளித்து வருகிறது. இதைத் த்விர தமிழக அரசு ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்,சிறப்பு கூட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் வளர்ச்சித் திட்டம், மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம், வளர்ச்சி நிவாரணத்



திட்டம், இரண்டாம் பகுதித் திட்டம் ஆகியவற்றின் மூலமும் திட்டத்தில் சாராத இனங்களின் மூலமும் நிதி உதவிகளை அளித்து கதர் கிராமத் தொழில் வளர்ச்சியில் சிறப்பான அக்கறை காட்டி வருகிறது. இதன் பலனாய் இந்த 25 ஆண்டுகளில் தமிழ் நாட்டில் கதர் மற்றும் கிராமத் தொழில்களில் வியத்தகு வளர்ச்சியைக் கண்டிருக்கிறோம்.

**கதர் (பருத்தி)**

1960-61-ல் ரூ. 120 இலட்சமாக இருந்த கதர் உற்பத்தி இன்று ரூ. 788.85 இலட்சமாக உயர்ந்துள்ளது. 102 இலட்சமாக இருந்த கதர் விற்பனை ரூ. 1074.78 இலட்சத்திற்கு உயர்ந்துள்ளது. 1960-61-ல் 27,754 கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. இன்று 41,659 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இவர்களுக்கு 1960-61-ல் கூலியாக வழங்கப்பட்ட தொகை ரூ. 34.91 இலட்சமாகும். 1984-85-ல் ரூ. 544.11 இலட்சம் கூலியாக வழங்கப்பட்டுள்ளது.

**கதர்ப் பட்டுத் தொழில்**

1960-61-ல் கதர்ப்பட்டு உற்பத்தி 9.90 இலட்சம். இது 1984 85-ல் ரூ. 263.63 இலட்சமாக உயர்ந்துள்ளது. இன்று 17 பட்டுத் தொழில் அலகுகளின் மூலம் 1418 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. கதர்த் திட்டத்தில் மேலும் 2,216 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அகில இந்திய அளவில் கதர் உற்பத்தியில் உத்தரப் பிரதேசத்திற்கு அடுத்து தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

**பாலியஸ்டர்**

வேலை வாய்ப்பை அதிகரிக்கும் நோக்கத்துடனும், மக்களின் நாகரிக வளர்ச்சிக்கேற்பவும் பாலியஸ்டர் துணி ரகங்கள், பல வண்ணங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இன்று ரூ. 7 இலட்சம் மதிப்புள்ள கதர் பாலியஸ்டர் சட்டை, பேண்ட், துணி ரகங்களும் வண்ண வண்ணப் புடவைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. மக்களிடத்தில் கதர் பாலியஸ்டர் துணி ரகங்களுக்கு மகத்தான வரவேற்பிருப்பதை இவ்வாண்டு விற்பனையின்போது கண்கூடாகக் கண்டோம்.

**கிராமத் தொழில்கள்**

அனைத்திந்திய அளவில் கிராம தொழில் பொருட்கள் உற்பத்தியில் தமிழ்நாடுதான் முதலிடம் வகிக்கிறது. கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி 1984-85-ல் ரூ. 10,692.77 இலட்சத்திற்கு உயர்ந்துள்ளது. விற்பனை ரூ. 10,297.97 இலட்சத்தை அடைந்துள்ளது.

**வேலை வாய்ப்பு**

1960-61-ல் முழு நேர வேலை வாய்ப்பும், பகுதி நேர வேலை வாய்ப்பும் 2,08,280 நபர்களுக்கு அளிக்கப்பட்டது. இது 1984-85-ல் 6,12,792 நபர்களாக உயர்ந்துள்ளது. ஆதிதிராவிட மக்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும், மேலும் சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களுக்கும் அதிக அளவில் வேலை வாய்ப்பு அளிப்பதைத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தன்னுடைய தலையாய கொள்கையாகக் கொண்டுள்ளது. பல சிறப்பு நடவடிக்கைகளின் மூலம் 31-3-86-க்குள் 6,59,655பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற நோக்கோடு செயல்பட்டு வருகிறது. இன்று வேலை வாய்ப்புப் பெறுவோரில் 40 சதவீதத்திற்கு மேல் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் கதர் கிராமத்தொழில் துறைகளில் மேலும் பல இலட்சம் கைவினைஞர்களுக்கு முழு நேர வேலைவாய்ப்பளிப்பதற்கு இவ்வாரியம் பல திட்டங்களைத் தீட்டி வருகிறது. எஞ்சியுள்ள 74 ஊராட்சி ஒன்றியங்களில் கதர் கிராமத்தொழில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ஒவ்வொன்றிலும்200 கிராமக் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்காக அலகுகள் ஆரம்பித்து, நிலங்கள் பரிசாக அளித்து உதவும்படி செய்தித்தாள்களில்விளம்பரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் பலனாய் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு ப. சிதம்பரம் அவர்கள் காரைக்குடி அருகில் கண்டனூரில் 30 ஏக்கர் நிலம் கொடுத்து உதவியுள்ளார்கள். இப்படி இன்னும் பலர் கிராமப் பகுதிகளில் பரிசாக நிலங்களைக் கொடுத்து உதவினால் அங்குத் தொழிற்கூடங்களை நிறுவி, ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்க இயலும். பின் தங்கிய நிலையிலுள்ள ஆதி திராவிட மக்களுக்குச் சேவை செய்வதற்காக மட்டும் இன்று வாரியம் 75 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை நடத்தி வருகிறது.



பல சிறப்புத் திட்டங்கள் மூலம் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு உதவிகளை இவ்வாரியத்தின் மூலம் அளித்து வருகின்றன.

**ஒருங்கிணைந்த மலைவாழ் வளர்ச்சித் திட்டம்**

6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1980-85) 2,000 மலைவாழ் மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்க ரூ. 35.69 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்தது. இந்தத் தொகையைக் கொண்டு இதுவரை 2,452 மலைவாழ் மக்களுக்கு முழு நேரவேலைவாய்ப்பு அளிக்கும்வகையில்தேனீப்பெட்டிகளும், தச்சு மற்றும் கொல்லுத் தொழில் செய்வதற்குரிய சாதனங்களும் வழங்கப்பட்டு பிரம்பு, மூங்கில் தொழில் செய்வதற்குத் தேவையான பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

**மலைப் பகுதி வளர்ச்சித் திட்டம்**

6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 36.40 இலட்சம் செலவில் 875 மலைவாழ் மக்களுக்குப் பல்வேறு வேலை வாய்ப்புகள்அளிக்கப்பட்டுள்ளன. தேனீப் பெட்டிகள், எண்ணெய் பிழிந்து வடிகட்டும் கருவிகள், நீலகிரித் தைலத் தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள்அமைத்தல், எலுமிச்சைப்புல் தைலம் தயாரித்தல், ரொட்டி தயாரித்தல் முதலான உதவிகள் நீலகிரி மாவட்டத்தில் பரவலாகச் செய்யப்பட்டுள்ளன.

**வறட்சி நிவாரணத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் 4,655 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கிய தமிழக அரசு



றளகத்தில் உள்ள கதர் கிராமத் தொழில் அங்காடியில் தீபாவளி நேரத்தில் கதர் பட்டுச் சேலை விற்பனை.

137.55 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத் தொகையைக் கொண்டு இராமநாதபுரம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்**

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களில் சுமார் 14,000 பேருக்குப் பல்வேறு கிராமத் தொழில்களில் வேலை வாய்ப்பு அளித்திட தமிழக அரசு ரூ. 137.30 இலட்சம் அனுமதித்துள்ளது. இந்தத் தொகை முழுவதையும் பயன்படுத்திப்பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் சிறப்பாகச்செயல்படுத்தி வருகிறது.

**சிறப்புக் கூட்டுத்திட்டம்**

இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஆதிதிராவிட மக்களுக்குப் பிரத்தியேக வேலை வாய்ப்பு வழிகளைக் கண்டு ஆராய்ந்து அமல்படுத்தி வருகிறது. இதன் கீழ் வரும் கிளஸ்டர் வளர்ச்சித் திட்டமும் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. சிறப்புக் கூட்டுத் திட்டத்தின் மூலம் ரூ. 567.70 இலட்சமும் (14,759 பேர் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர்) கிளஸ்டர் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ரூ. 856.98 இலட்சமும் (9,385 பேர் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர்) தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் தமிழகத்தில் பல மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**குடும்பத்தில் ஒருவருக்கு வேலை**

இத்திட்டத்தின் முன்னோடியாக, முதல் கட்டத்தில் 1275 நபர்களுக்குப் பயன் அளிக்குமாறு ரூ. 79.48 இலட்சம் அனுமதி அளிக்கும்படி தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் இந்தத் தொகையைக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் வேலையில்லாமல் இருக்கும் குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து வேலை வாய்ப்பளிக்க வாரியம் ஆர்வம் கொண்டுள்ளது.

கடந்த அக்டோபர் 85-ல் நடைபெற்ற வெள்ளி விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இராமநாதபுர மாவட்டத்தைத் தமிழ்நாடுகதர்கிராமத் தொழில் வாரியம்தத்து எடுத்துக் கொள்ளும்சிறப்பான திட்டத்தை அறிவித்தார்கள். அத்துடன் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 25 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு,அவற்றைத் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் தத்து எடுத்துக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு, தரமான கதர் ரகங்கள்,வண்ணப் பட்டுப் புடவைகள், சோப்பு, சுத்தமான தேன், ரொட்டி, கைக்குத்தல் அரிசி, அழகழகான காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் பிரம்புப் பொருட்கள், பனைப் பொருட்கள், கலை வேலைப்பாடு அமைந்த மட்பாண்டங்கள், யானைத் தந்தங்களாலான பல பொருட்கள், தரமான உண்ணும் எண்ணெய்கள், நேர்த்தியான பாய்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டு, அவை காதி கிராப்டுகளின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

சென்னை பாரிமுனையிலுள்ள 'குறளகம்' கதர் அங்காடி அகில இந்தியாவிலேயே மிகப்பெரிய கதர் அங்காடியாகும். தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் சிறப்பான, தனித்தன்மை வாய்ந்த ''குறளகம்'' கதர் அங்காடியில், வீட்டுத் தேவைக்கு உரிய அனைத்துப் பொருட்களும் ஒரே இடத்தில் கிடைக்கின்றன.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அகில இந்தியாவிலேயே சிறப்பாகச் செயல்படுகின்ற வாரியம் என அனைவராலும் பாராட்டப்படுகின்றது. சமீபத்தில் மத்திய அரசு முன்னாள் ரிசர்வ் வங்கி கவர்னர் திரு எம். இராமகிருஷ்ணய்யா அவர்கள் தலைமையில் கதர் கிராமத்தொழில் ஆய்வுக் கமிட்டியைத் தமிழகத்திற்கு அனுப்பியிருந்தது. இக்கமிட்டி தமிழ்நாட்டில் ஒரு வாரம் சுற்றுப் பயணம் செய்து ஆய்வு செய்து தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பல்வேறு திட்டங்களின் வளர்ச்சிகளை மகிழ்ந்து பாராட்டிக் கடிதம் எழுதியிருக்கிறது. மத்திய அரசின் ஆய்வுக் கமிட்டித் தலைவரின் பாராட்டுகளிலிருந்தே இவ்வாரியத்தின் ஏற்றமிகு வளர்ச்சியையும் அதன் மூலம் தமிழக மக்களுக்கு அது ஆற்றியுள்ள தொண்டின் சிறப்பினையும் உணர முடிகிறது.

# கன்னியாகுமரி மாவட்டத்தில்

# வெண்மைப் புரட்சி

மு. கிருஷ்ணன்

செய்தி-மக்கள் தொடர்பு-அலுவலர்
கன்னியாகுமரி மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் பால் உற்பத்தி பெரும் பகுதி கூட்டுறவு அமைப்பிலும் சிறிய அளவு தனிநபர் கையிலும் இருக்கிறது. இந்த மாவட்டத்தில் 97 பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களும் மாவட்ட அளவில் 'கன்னியாமில்க்' என்ற பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியமும் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு அமைப்புகள் தினசரி சராசரியாக 38,000 லிட்டர் பாலை உற்பத்தி செய்கின்றன. இதில் சராசரி 17,000 லிட்டர் பாலை ஒன்றியம் பெற்று



வாடிக்கையாளர்களுக்கு விநியோகம் செய்து வருகிறது.

மாவட்ட அளவில் இயங்கி வரும் மாவட்ட ஒன்றியத்தில் இம் மாவட்டத்தில் உள்ள 87 பிரதம உற்பத்தியாளர் சங்கங்களும், திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரித் தாலுகாவிலுள்ள 10 பிரதம பால் உற்பத்தியாளர் சங்கங்களும் அங்கம் வகிக்கின்றன. அரசும் இதில் அங்கம் வகிக்கிறது. இதன் பங்குமூலதனம் ரூ. 4,23,509 ஆகும். இதில் அரசுப் பங்கு முதலீடு ரூ. 3.50 இலட்சமும் அடங்கும்.

**முக்கிய வளர்ச்சிப் பணிகள்**

மாவட்ட அளவிலான ஒன்றியம், பிரதம சங்கங்களில் இருந்து அவை உற்பத்திசெய்யும் பாலைக் கொள்முதல் செய்வதன் மூலம் பிரதம சங்கங்களின் உறுப்பினர்களுக்குப் பால் உற்பத்தியைப் பெருக்க உதவி செய்கிறது. இதற்கெனப் பலவகை வளர்ச்சிப் பணிகளை அரசின் உதவி மூலம் செய்து வருகிறது.

மார்த்தாண்டத்தில் அந்தப் பகுதிச் சங்கங்களின் பாலைக் கொள்முதல் செய்து சேமித்து வைப்பதற்கென அங்கு ஒரு பால் குளிரூட்டும் நிலையம் 2.2.1985 முதல் செயல்பட்டு வருகிறது.

பிரதம சங்கங்களில் இருந்து கொள்முதல் செய்யும் பால், ஒன்றியத்தில் பதனம் செய்யப்பட்டு, பிறகுதான் விநியோகம் செய்யப்படுகிறது. பதனம் செய்வதற்குரிய இயந்திரங்கள் ஒன்றியத்தில் உள்ளன. தமிழக அரசின் பங்குத்தொகை முதலீட்டின் மூலம், பால் பதனிடும் திறன் மணிக்கு 2000 லிட்டரிலிருந்து 4000 லிட்டர் வரை அதிகரிக்கப் பட்டுள்ளது. இதனால், குறைந்த நேரத்தில் அதிக அளவு பாலைப் பதனம் செய்து சேமிக்க முடியும்.

பால் பதனம் செய்யும் வேலைக்கு மின்சாரம் மிகவும் இன்றியமையாதது. கடந்த ஆண்டுகளில் மின்சாரத் தட்டுப்பாடு அதிகமாக இருந்த காலத்தில் பால் கொள்முதல் செய்து சேமிக்க முடியாத நிலை உருவாயிற்று. இந்த நிலையைச் சமாளிக்க ஒன்றியத்தில் ஒரு ஜெனரேட்டர் நிறுவப்பட்டுள்ளது. இதனால் சாதாரண உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் பாலைத் தடங்கலின்றி ஒன்றியம் கொள்முதல் செய்ய முடிகிறது.

**பாலின் தரம்**

இம்மாவட்டம் முழுவதுமாக பசுவின் பால்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. அதிலும் கல்குளம், விளவங்கோடு தாலுகாப் பகுதிகளில் அதிக அளவில் கலப்பினப் பசுக்கள் உள்ளன. இவற்றிலிருந்து பெறப்படும் பாலின் தரம் சட்டப்படி இருக்கவேண்டிய அளவுக்குச் சற்றுக் குறைவாக இருப்பதாகச் சங்க உறுப்பினர்கள் கூறுகிறார்கள். (பசுவின் பாலுக்குச் சட்டப்படி இருக்க வேண்டிய தரம் - கொழுப்புச் சத்து 3.5% இதரச் சத்து 8.5%. ஆனால் பிரிசியன் போன்ற கலப்பின மாட்டுப் பாலில் கொழுப்புச் சத்து 3.5% இதரச் சத்து 8.0 முதல் 8.2% மட்டும் இருப்பதாகத் தெரிய வருகிறது) எனவே கலப்படத் தடுப்புச் சட்டத்தின் விதிகளிலிருந்து விலக்கு அளிக்கவேண்

டும் எனவும் இப்பகுதி உற்பத்தியாளர்கள் கோரியுள்ளனர்.

**பாலின் விலை**

ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளது போல், இம்மாவட்டத்தில் அதிக அளவு பசுவின் பாலாக இருப்பதால் கொள்முதல் செய்யப்படும் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.2.50 வீதம் மாவட்ட ஒன்றியம் பிரதம சங்கங்களுக்கு வழங்கி வந்தது. 1.11.1984 முதல் கொழுப்புச் சத்து அடிப்படையிலேயே கொள் முதல் விலை நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. உபரி காலத்தில் அதிகப்படியாக வரும் பால், அண்டை மாநிலமான கேரள மாநில இணையத்திற்கும் மதுரை மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கும் விற்பனை செய்யப்படுகிறது.

விலைவிவரம்:

| | ரூ. |
|---|---|
| உள்ளூர் விற்பனை லிட்டர் ஒன்றுக்கு (ரொக்கத்துக்கு) | 3.30 |
| கூப்பன் கார்டுகளுக்கு | 3.20 |
| திருவனந்தபுரம் மற்றும் விசேட ஆர்டர் | 3.60 |
| பாக்கெட் பால் | 3.60 |

ஆதாயம்

1981-82—ரூ. 25,971.83(இலாபம் தணிக்கையின் படி)

1982-83—ரூ. 62,780.09 (இலாபம் தணிக்கையின்படி)

1983-84—ரூ. 57,016 (இலாபம் தோராயமாக)

1984-85—ரூ. 23,870.10 இலாபம் தோராயமாக)



கொள்முதலுக்கு முன் பாலின் தரம் சோதனை செய்யப்படுகிறது.

வாடிக்கையாளர்களுக்குச் சரியான அளவில் சுகாதார முறையிலும் பால் கிடைப்பதற்கென பிப்ரவரி 84 முதல் நாகர் கோயில் நகரத்தில் பாலிதின் பைகளில் பால் நேரிடையாகவும்





பால் விநியோகத்திற்கு 'கன்னியாமில்க்' வெண்டர்கள் புறப்பட்டுச் செல்லுதல்.

முகவர்கள்மூலமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சுமார் 3 லட்சம் ரூபாய் இந்த இயந்திரத்துக்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது. பால் விற்பனையுடன் அதன் உபபொருட்களையும் தயார் செய்து விற்பனை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக மாவட்ட ஒன்றியம், பாட்டில்களில் அடைக்கப்பட்ட-சுவையூட்டப்பட்ட பாலை தயார் செய்து விற்பனை செய்து வருகிறது. இத்துடன் பால் பேடாவும் தயார் செய்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**கன்னியாமில்க் பார்**

பால் மற்றும் பால் பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு நியாயமான விலையில் வழங்கும் பொருட்டு, சேவை நோக்கோடு நாகர்கோவில் நகரில் ஐந்து மில்க் பார்களும், கன்னியாகுமரி, சுசீந்திரம் பகுதிகளில் ஒவ்வொரு மில்க் பாரும் நிறுவி அதன் வாயிலாக சூடான பால், காபி, டீ, ரோஸ் மில்க், சுவையூட்டிய பால், பால் பேடா, நெய் ஆகியவை நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு**

பிரதம சங்கங்களின் உறுப்பினர்களின் கால்நடைகளைப் பராமரிப்பதற்கென ஒன்றியத்துடன் இணைந்து செயல்பட, கால் நடை உதவி மருத்துவர் தலைமையில் ஒரு நடமாடும் கால் நடை மருத்துவப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இந்தப் பிரிவு வாரத்தில் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட சங்கங்களுக்குச் சென்று அங்குள்ள உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு மருத்துவச் சிகிச்சை அளித்து வருகிறது. இத்துடன் கால்நடைகளுக்குச் செயற்கை முறைக் கருவூட்டலும் செய்யப்பட்டு வருகிறது.



**பால் சேகரிப்புக் குழு**

மாவட்டத்தில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் பாலின் தரத்தை மேம்படுத்தவும் 1980 முதல் பால் சேகரிப்புக் குழு ஒன்றிய அளவில் செயல்பட்டு வருகிறது. இக்குழு புதிய சங்கங்கள் அமைப்பது குறித்து ஆய்வு அறிக்கைகளைத் தயார் செய்து அனுப்பும். மற்றும் அமைக்கப்பட்டுள்ள சங்கங்களில் கொள்முதல் செய்யும் பாலின் தரத்தை மேம்படுத்தும் பணியையும் செய்து வருகிறது. இக்குழுவில் பால் பண்ணை அலுவலர் தலைவராகவும் மற்றும் ஒரு கால்நடை உதவி மருத்துவரும் நான்கு விரிவாக்க உதவியாளர்களும் பணியாற்றி வருகிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைப் பெருந்தலைவராகவும், இதர ஏழு அரசு அலுவலர்களை நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் கொண்டு, ஒன்றியத்தின் நிர்வாகம் திறம்படச்செயல்பட்டு வருகிறது.

# கவி பிறந்த கதை

ஆசிரியர்: சி. விஸ்வநாத ஐயர்.

விற்பனை உரிமை: ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகம். 2. மாடல் ஹவுஸ் லேன். சி.ஐ.டி. நகர் சென்னை 600 035

விலை ரூ. 8. பக்கம் 114

மகாகவி பாரதியைக் குறித்து அவரது இளவல் எழுதிய 9 கட்டுரைகளும் 2 வானொலி உரைகளும் அடங்கிய நூல் இது.

ஒருவர் புகழ் பெற்று விட்டால் அவரைக் குறித்துப் பற்பல கட்டுக் கதைகள் நாட்டில் பெருகி விடுவது வாடிக்கை. பாரதியாரும் இந்தச் சூழ்நிலையிலிருந்து தப்பிக்கவில்லை. அவரைக் குறித்து பலர் பல தவறான செய்திகளைச் சொல்லியிருக்கின்றனர். அவ்வாறு பொய்ச் செய்திகளைப் பரவ விடுவது குறித்து வருத்தப்படுகிறார் அவரது இளவல் இந்நூலின் ஆசிரியர்.

பாரதியைக் குறித்துத் தாம் அறிந்த விஷயங்களையும் சாட்சியாக இருந்த நிகழ்ச்சிகளையும் பிறர் தவறாகக் குறிப்பிட்ட செய்திகளுக்குத் தக்க மறுப்புரைகளையும் இந் நூலில் தெரிவித்திருக்கிறார். அத்துடன் பாரதியின்-திறமை-பெருமை-புலமை அனைத்தையும் விளக்கியுள்ளார்.

நூல், அளவில் சிறிதெனினும் கீர்த்தியில் பெரிதாக விளங்குகிறது. பாரதியின் சமகாலத்தவர் என்பதைவிட பாரதியின் தம்பியே பல செய்திகளைத் தெரிவிக்கிறார் என்பதனால் இந்நூல் பெருமை பெருகிறது.

நடையில் ஓட்டம், கருத்துச் செறிவு - தெளிவான விளக்கம் - எளிதில் புரிந்து கொள்ளும் வாக்கிய அமைப்பு - அனைத்தும் இந் நூலில் உண்டு.

—தமிழ்ப்பித்தன்

# மனிதன் என்னும் தீவு

ஆசிரியர்: கோமல் சுவாமிநாதன்

வெளியீடு: மயிலவன் பதிப்பகம், 7, எம். கே. அம்மன் கோயில் தெரு. மயிலாப்பூர் சென்னை-600 004.

விலை: ரூ. 8. பக்: 112.

இந்நாடக நூலில் வரும் பாத்திரங்கள் நாமும், நம்மிடையே உள்ளவர்களும்தான்.

இந்நாடகத்தில் பெண்களுக்கு கொடுமை செய்த நாலு பேர்களுடைய உள்மனம் பேசுகிறதாகக் கூறும் உத்தி புதுமையானது. முதலில் சற்று குழப்பதைத் தந்தாலும் படிக்கப் படிக்கப் புரிகிறது.

இந்நூலைப் படித்து முடித்த போது....

இன்றும் எத்தனையோ மீனாட்சிகள் விஷத்தாலும், கயிறாலும், நீராலும், கிரஸினாலும் மாண்டு வெந்து தணிந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

நரேந்திரன் போன்ற மனித மிருகங்களும் நீதியின் பிடியிலிருந்து நழுவிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்களுக்குத் தண்டனையே கிடையாதா? என்ற ஆத்மார்த்தமான கோபம் நம்முள் அலையாய் மூண்டெழவே செய்கிறது. இதுவே ஆசிரியருக்கு வெற்றிதான்.



# நூல் நயம்

# படித்த மனைவி

ஆசிரியர்: லக்ஷ்மி

வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி தபால்பெட்டி நெ.617 மயிலாப்பூர், சென்னை-600 004.

விலை ரூ. 12 பக்கம்: 167

படித்த பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளமாட்டேனென்று, படிக்காத பெண்ணை மணந்து கொண்ட ராமசந்திரன், பின்னர் படித்த பெண்ணைத் திருமணம் செய்யாமற்போனோமே என்று வருந்தி, ஏங்கித் தவித்து, தன் மனைவி படித்தவள் தான், படிக்காத பெண் மாதிரி நடித்தாள் என்று அறிந்து கொள்கிறான் என்று முடியும் கதையில் துவங்கி, கல்லூரி விடுதி மாணவிகளுள் உருவாகும் சண்டை பின் எப்படி சமாதானம் ஆகிறது என்று கூறி முடிக்கும் கடைசிக் கதை வரை பத்தொன்பது சிறுகதைகள் இந் நூலில் இருக்கின்றன.

எழுத்துலகில் இன்றுள்ள வார்த்தைச் சுருக்கம், அழுத்தமான சொற்பிரயோகம், ஜெட் வேக எழுத்து ஏதும் இதிலில்லை. எல்லாம் விரிவாக விவரிக்கப் பட்டிருக்கின்றது.

ஒரு நல்ல புத்தகத்தை, நல்ல சிறுகதைகளைப் படித்த நிறைவு ஏற்படுகிறதே அது போதாதா?

—அ. மருதவிநாயகம்

# அணுவின் தந்தை

ஆசிரியர்: பி.வி.கிரி

வெளியீடு: அமிழ்தம் பதிப்பகம் 15, முத்துப்பிள்ளை தெரு, வ.உ.சி. நகர், வேலூர்-632001 வடஆர்க்காடு மாவட்டம்

விலை ரூ. 6.25 பக்கம்: 80

ஐன்ஸ்டைன் வாழ்க்கை வரலாற்றை ஒரு குடும்பத்தினரிடையே நிகழும் அன்றாட நிகழ்ச்சிகளோடு இணைத்து உரைநடைகளால் விவரித்து இருப்பது பாராட்டுக்குரியது.

ஒரு வாழ்க்கை வரலாற்றைப் படிக்கிறோம் என்ற உணர்வு இந் நூலைப் படிக்கும்போது எழுவதில்லை. ஆனால் நம் கண் முன் நடைபெறுவது போலவே இருக்கிறது.

எளிய நடையில், நாம் பேசும் பாணியில் அழகாக எழுதி இந் நூலை அமைத்திருக்கிறார் ஆசிரியர்.

அறிவியல் பற்றி, குழந்தைகள் கல்வி பற்றி ஐன்ஸ்டைனின் கருத்தும், நூலின் இறுதியில், 'ஐன்ஸ்டைனும் அவரின் சிந்தனை முத்துக்களும்' என்ற பகுதியும் நூலுக்குச்சிறப்புச் சேர்க்கின்றன.

நம் குழந்தைகள் எளிதாக ஐன்ஸ்டைனைப் பற்றி அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் உதவும்.

## பொன்மனச் செம்மலும் புன்னகை மலர்களும்

ஆசிரியர்: எஸ். குலசேகரன்

வெளியீடு: அமிழ்தம் பதிப்பகம்,
15, முத்துப்பிள்ளை தெரு,
வ.உ.சி. நகர், வேலூர் 632001
வடஆர்க்காடு மாவட்டம்,

விலை: ரூ.7.50 பக்கம்: 96.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றிய புதுமைநோக்கு நூல்.

முதல்வர் அவர்களின் சிறப்பியல்புகளையும், குண நலன்களையும், அவர் பிறரிடம் காட்டும் அன்பு, பரிவு, நட்பு ஆகியவற்றையும் பாராட்டி எழுதியுள்ளார் ஆசிரியர்.

காந்தியடிகள், நேருஜி, இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி, பெரியார், அண்ணா, காமராஜர், திரு.வி.க. பாரதியார், பாரதிதாசனார், கண்ணதாசன், ஔவை துரைசாமி, கலைவாணர், தெரஸா, வினோபாபாவே பசும்பொன்னார் முத்துராமலிங்கர் ஆகியோரைப் பற்றி முதல்வர் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறிய கருத்துக்களை மிக அழகாக, எளிய முறையில் குழந்தைகள் நினைவில் பதியும் வண்ணம் சொல்லி இருக்கிறார் ஆசிரியர்.

முதல்வர் அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த, இதுவரை வெளிவராத பல அரிய சம்பவங்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

—இளவல்

## திறந்த வெளிச் சிறைகள்

ஆசிரியர்: சி. பன்னீர்ச்செல்வம்

வெளியீடு: ஜே. ஜே. பதிப்பகம்
76பி, என். ஜி. ஓ.
காலனி,
திண்டுக்கல்-624 009

விலை: ரூ. 12. பக்: 152.

பெண்ணுரிமை, பெண்ணடிமை, சாதிப்பூசல்கள், வரதட்சிணை, ஏழை பணக்காரன் போன்ற இன்றைய பிரச்சனைகளைக் கருவாகக் கொண்ட சிறுகதைகள்.

சரளமான நடை, கதை நடக்கும் மண்ணுக்கே உரிய பேச்சு, கதையின் கருவை அழுத்தமாகச் சொல்லும் வார்த்தைப் பிரயோகம் அனைத்தும் இந்நூலில் உண்டு.

வாழ்வியல் சம்பவங்கள் அதிகம் இருப்பதால் பத்திரிகைகளில் படித்த செய்திகள் போல் கதைகள் அமைந்திருக்கின்றன.

இக்கதைகளில் வரும் மனிதர்களும், மனுஷிகளும்கூட நாம் அன்றாடம் சந்திக்கும் நபர்களைப் போல் இருப்பது கதையமைப்பின் சிறப்பு.

மண்ணின் மணம் கமழும் நல்ல கதைகளைக் கொண்ட தொகுப்பு இது.

ந. குமாரசாமி



இலக்கியம் மனிதனது அறிவை வளர்க்கிறது; மனிதனுக்குத் தெளிவை ஏற்படுத்துகிறது; நன்மை தீமைகளை எடுத்துக் காட்டுகிறது.

## ஜீவா என்றொரு மானுடன்

ஆசிரியர்: பொன்னீலன்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக்
ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட்,
41-பி, சிட்கோ
இண்டஸ்டிரியல்
எஸ்டேட்,
சென்னை-98.

விலை: ரூ. 18. பக்கம்: 404

ஜீவா என்று தமிழ் மக்களால் போற்றிப் புகழப்படும் திரு ப. ஜீவானந்தம் அவர்களைப் பற்றிய சுவையான செய்திகள் நிறைந்த, வரலாற்றுக் குறிப்புகள் பொதிந்த நூல் இது.

ஜீவா அவர்கள் காந்தியடிகளுடன் பழகி, வ. உ. சிதம்பரனார், மறைமலையடிகளார் ஆகியோரிடம் கலந்துரையாடி, தந்தை பெரியாரிடம் நட்புக் கொண்டு ஆற்றிய தொண்டுகள் எல்லாம் மிக அழகாகத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

''ஜீவானந்தம் நாட்டின் விடுதலைப் பணியில் ஓயாது உழைத்தவர். உத்தமர், துடிக்கும் தமிழ் இதயம் ஜீவா'' என்று தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களால் போற்றப்பட்டவர். அவர் ஆசிரமம் அமைத்து நாட்டுத் தொண்டையும், சமூகத் தொண்டையும் செவ்வனே செய்தார். நாட்டுத் தொண்டுக்குக் காந்தியடிகளையும். சமூகத் தொண்டுக்குத் தந்தை பெரியாரையும் வழி காட்டிகளாகக் கொண்டார்.

நாடகத்துறையைப் போல கவிதைத் துறையிலும் மிக்க ஈடுபாடு கொண்டு இலக்கியத் தொண்டாற்றியவர். அன்னாரைப் பற்றி அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் உதவும். பாடுபட்டுத் தேடி, செய்திகளைச் சேகரித்த நூலாசிரியர் திரு பொன்னீலனைப் பாராட்ட வேண்டும்.

— மறைமலை

## எளிய யோக சாதனை

அருளியது: ஸ்ரீசுவாமிசிவானந்தா,
தமிழாக்கம்: சி.கனகராஜன்
வெளியீடு: தெய்வீக வாழ்க்கைச் சங்கம்
சிவானந்தா ஆசிரமம்,
இராசிபுரம், சேலம்.

விலை: ரூ. 4 பக்கம்: 166.

யோகம் செய்வதால் ஏற்படும் நன்மைகளை விளக்குகிறது இந்நூல். பக்தியோகம், கர்மயோகத்தின் கருத்துக்கள், பேரானந்தம் பெறுவதற்கான வழிமுறைகள், பிரம்மச்சரியத்தின் சிறப்பு, மனக்கட்டுப்பாட்டின் மகிமை முதலான கருத்துக்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள உதவும். இறைவனின் திருப்பெயர் உலகில் சிறந்த மருந்து; சிறிதளவே பேசுக, இனிமையாகப் பேசுக, தேவைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்; கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள், வேலைக்காரர்களை நம்பியிருக்காதீர்கள்; தொண்டு செய்வதற்காகக் காத்திருங்கள்— இப்படி ஏராளமான கருத்துக்கள் நம் சிந்தனைக்கு விருந்தூட்டுகின்றன.

—பி.வி. கிரி

# யாதும் வீடே!



— ஜோதிர்லதா கிரிஜா

குழந்தை தூளியில் சிணுங்கிய சத்தம் கேட்டுச் செல்லம்மா எழுந்து ஓடிப்போய் 'ளொள ளொளொளளொளரயாய்....யீ.. என்று தனக்கே உரிய பாணியில் இழுத்துக்கூவி, கலைந்துபோன அதன் உறக்கத்தை மீண்டும் அதற்கு ஏற்படுத்திக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டாள்.

செல்லம்மாவின் அந்த 'ளொ, ளொளொளொளொளொளொய் ..யைக் கேட்டால் சாத்தப்பனுக்கு எப்போதுமே எரிச்சல்தான் பற்றிக்கொண்டு வரும். அதிலும் இன்று மிகவும் களைத்துப்போயிருந்த நிலையில் அவனது எரிச்சல் வழக்கத்தைக் காட்டிலும் மிகுதியாக இருந்தது.

..ஏய் கொஞ்சம் மெதுவாகத் தான் கத்தேன். காது சவ்வு பிஞ்சுபோகும் போல இருக்குது.. ராத்திரி மணி பத்து ஆகுதில்ல? அக்கம் பக்கத்துல இருக்குறவங்கல்லாம் கோவிக்கப் போறாங்க. கொளந்தையைத் தூங்கப் பண்ணுறேன் பேர்வளின்னு நீ ஊர்க் கொளந்தைகளையெல்லாம் எளுப்பி விட்றாதே...'' என்று தன் படுக்கையில் இருந்தவாறே அவன் சத்தம் போட்டான்.

''அட சர்த்தாயா, நீ கம்னு இரு. எளுந்து வந்து தூங்க வையேன் பார்ப்போம். கொளந்தை தூங்காம கத்திக்கிட்டே இருந்தா அதுக்கும் நீ என்னயத்தானே கோவிக்கிறே? ஒரு நாளாச்சும் எளுந்து வந்து தூளியை ஆட்டித் தூங்க வெச்சிருக்கிறயா? அத்தனை நல்லா பேசுவே நீட்டி முளக்கி.வா, வா எளுந்திரிய்யா....'' என்று ஆங்காரத்துடன் கத்திய செல்லம்மா தூளியை அம்பேல் என்று அப்படியேவிட்டுவிட்டுத் தன்படுக்கை நோக்கி நகரத் தொடங்கினாள்.

சட்டென்று ஆட்டுவதை நிறுத்தியதில் தூளி அலங்கோலமாக ஓர் ஆட்டம் ஆடி நின்றது. தூளியின் ஆட்டம் ஒரு சில நொடிகளில் நின்றுபோனதும், குழந்தை திரும்பவும் வீறிட்டு அழத் தொடங்கிற்று. ஆங்காங்கு முடிக்கப்படாமல் அரைகுறையாய் இருந்த அந்தப் பெரிய கட்டடம் இடிந்து போய்விடுமோ என்னும்படியான அளவுக்கு அதன் குரல் ஓங்கிப் போயிற்று. அதுவும் தூளியாட்டலின் சுகம் நின்று போன எரிச்சலின் மீதூறலால் அதன் கூக்குரல் முன்னைக்காட்டிலும் ரொம்பவும் அதிகமாகிவிட்டது.

''ஏய், என்ன பெரிசா வந்து படுத்துக்கிட்டே ,போய்த்தூங்கப் பண்ணேன்...''

''நீதான் எளுந்திரிச்சுப் போயேன்ய்யா. எதுனாச்சும் நல்ல பாட்டாப் பாடித் தூங்கப்பண்ணு அத்த. என் கொரல்தான் உனக்குக் கர்ண கடூரமா இருக்குதே..''

குழந்தையின் வீறிடலானது நொடிக்கு நொடி அதிகமாகிக் கொண்டே போயிற்று. சாந்தப்பனுக்கு எரிச்சலான எரிச்சல். வேறு வழி இல்லாமல் முனகிக் கொண்டே படுக்கையை விட்டு எழுந்து தூளிப்பக்கம் போனான். போய் அதை ஆட்டத் தொடங்கினான். அப்படியும் குழந்தை அழுகையை நிறுத்தவில்லை.

''யோவ். குழந்தையோட எதுனாச்சும் பேசணும்யா. இல்லாட்டி பாடணும். அதுவும் இல்லாட்டி என்னய மாதிரி எதுனாச்சும் ஓசை எளுப்பணும். ஒண்ணுமே இல்லாம வெறுமே என்னமோ சிமிட்டியும் மணலும் கலக்குற மெஷின் மாதிரி குலுக்கினா பத்தாதுய்யா....'' என்று செல்லம்மா சிரித்துவிட்டுப் பெரியதாய்க் கொட்டாவி விட்டாள்.

''ஏலே, சனியனே, ஒறங்கித் தொலையேன். ரெண்டு லட்சம் போட்டுக் கட்டின வீடு. அப்படியே இடிஞ்சு விளுந்திடும்போல இருக்குதே நீ கத்துற கத்தல்ல.''

''ரெண்டு லட்சம் முளுக்க இன்னும் செலவாகலையா. மாடி ரூம்புக்கெல்லாம் சன்னல் கம்பி போடலை. இன்னும் கிரில்லு வேலை பாக்கி நிக்கிது. காம்பவுண்டுச் சொவர் எளுப்பலை. எல்லாம் முளுசா முடிஞ்சதுக்குப் பொறகுல்ல ரெண்டு லட்சம் ஆகும்?'' - சொகுசாய் மல்லாந்து படுத்துக்கொண்டு இன்னுமொரு கொட்டாவியை உதிர்த்தபடி விமர்சனம் செய்த செல்லம்மாவை அவன் ஆத்திரத்துடன் பார்த்து இருட்டில் அவளுக்குத் தெரியாமல் பல்லைக் கடித்தான்.

''இது தூங்காது போல இருக்குது களுத...''

''ஒரு அஞ்சு நிமிசம் பொறுத்துக்கிட்டிருந்தியானா நான் அத்த இந்நேரம் தூங்கப் பண்ணி இருப்பேன். என்னமோ பெரிசா என்னைக் கேலி பண்ணிக் கடிஞ்சே. இன்னிக்கு ஒரு நாளு நீதான் தூங்கப்பண்ணு. சும்மா சுளுவாய் பேசிடலாம். செய்து பார்த்தாவில்ல தெரியும் எத்தின கஷ்டம்னு? நானும் இன்னிக்கு நேத்திக்கா கேக்கறேன், உன்னோட கேலியை ளொள்ளொள்ளொள் ளொயி சொல்லாம சாமார்த்தியம் இருந்தாத் தூங்கப் பண்ணு.''

''இத்தனாம் பெரிய வீட்டுல வேற ஒரு ரூம்புலதான் இந்தத் தூளி கட்டி வுட்றது. நாம படுத்

துக்குற ரூம்புக்குள்ளாறவே கட்டித் தொங்க வுடணுமா அத? ''

''இன்னாய்யா பேசற நீ கொளந்தையைத் தனியாகத் தூளி கட்டித் தொங்க வுட்றதா? இத்தனாம் பெரிய வீடு அதுக்காய்யா இருக்குது, தாய்க்கும் தகப்பனுக்கும் அதான்யா வித்தியாசம். எப்படித்தான் மனசு வருதோ இப்படிப் பேசுறதுக்கு, இனிமேப்பட்டு, நீ ஒரு நாள், நான் ஒரு நாளுன்னு கொளந்தய பார்த்துக்கிடணும்யா. அதான் நியாயம். நான் தெனமும் பார்த்துக்கிடவில்ல. அதான் உனக்கும் இது மாதிரிப் பேச்செல்லாம் வருது.''

சாத்தப்பனுக்கு வந்த வியப்புக்குக் கணக்கு வழக்கு இல்லை. அவன் அப்படியே நின்று போனான். குழந்தை அழுது ஆகாத்தியம் செய்து அவனது நிம்மதியைக் கெடுத்த ஆத்திரத்தில் அதைக் கிள்ளத் தயாராகிக் கொண்டிருந்த அவன் செல்லம்மாவின் வேலைப் பங்கீட்டுத் திட்டத்தால் மேலும் அதிகமாய்ப் பாதிக்கப்பட்டுச் சினத்தின் எல்லைக்கே போய்ச் சேர்ந்தான்.

எரிச்சலை அவள் மீது காட்டினால், இன்றைக்கு இருக்கிற 'மூடி'ல் தன்னையே திருப்பி அடித்தாலும் அடிப்பாள் என்று தோன்றிய நினைப்பால் ஆத்திரத்தை அடக்கிக்கொள்ள முடியாமற்போய்க் குழந்தையின் தொடையில் நறுக்கென்று கிள்ளினான்.

குழந்தை மேலும் அதிகப்படியான சுருதி கூட்டி அழத்தொடங்கிற்று. அது பின்னர் ஊரையும் கூட்டிவிடப்போகிறதே என்ற அச்சத்தில் செல்லம்மா விசுக்கென்று படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். ஆயினும் திடீரென்று மூளையில் உண்டான சிலிர்ப்பால் நடந்தது இன்னதென்று புரிந்து போனதில், இரவின் அமைதியை அறவே மறந்து அவளும் கத்தினாள்.

''கிள்ளி விட்டியாய்யா அத்த, அது என்னய்யா பண்ணிச்சு உன்னய? நீ தூளியில தொங்கினப்ப உங்கம்மாவும் உன்னய இப்படிச் செய்திருப்பாங்களான்னு நினைச்சுப் பாத்தியாய்யா நீ? என்ன ஆம்பளைங்களோப்பா!.''

''ஏய், கண்டமேனிக்குப் பேசாதடி. எளுந்திரிச்சு வந்து தூங்கப் பண்ணு உங் கொளந்தைய. உன்னாட்டமே ரவுடிப்பொண்ணு அது''

''என்னால ஆகாதய்யா, இன்னிக்கு ஒரு நாளு நீயே செய். எனக்குத் தலைய வலிக்குது. என்னமோ உனக்குச் சம்பந்தமே இல்லாத மாதிரிப் பேசறியே. ஆத்தாளுக்குத்தான் பொறுப்பா? அப்பனுக்கு இல்லியா?''

''ஏ, களுத, என்னது இன்னிக்கு என்னென்னமோ பேசுற? மீட்டிங்குக்குப் போய் வந்தா மாதிரி!.''

''ஏன்யா! இதுக்கு மீட்டிங்குக்குப் போவணுமா மீட்டிங்குக்கு. எனக்கும் சொந்த மூளை இருக்குய்யா. ஆம்பளையும் பொம்பளையும் எதுலயும் சமபங்கு ஏத்துக்கணும்யா. சமப்பொறுப்பு இல்லாட்டியும் கொஞ்சமாச்சும் இருக்கணும்யா பொறுப்பு. கொளந்த சிரிக்கறப்ப ஒங் கொளந்தை— அளுவுறப்பவும் அசிங்கம் பண்றப்பவும் என் கொளந்தையா ஏன்யா? உனக்கே நியாயமாய் படுதாய்யா? இன்னிக்கு நீ அத்தக் கிள்ளினாலும் சரி கொன்னாலும் சரி... நான் எளுந்திரிச்சு வர்ரதா இல்லே. நீதான் இன்னிக்கு அத்தப் பார்த்துக்கணும். எனக்குக் காய்ச்சல் வேற வர்றா மாதிரி இருக்குது''.

இன்னும் ஒரு தரம் குழந்தையைக் கிள்ளத் தோன்றிய எண்ணத்தைப் பாடுபட்டு அடக்கிய சாத்தப்பன், ''அப்ப இதெக் கொண்டுட்டுபோய்ப் பக்கத்து ரூம்புலதான் தூளிக்கட்டி விடுவேன். நீ தலையிடக்கூடாது. ஆமா''.

''அட, இன்னாய்யா நீ...உங்கூட பெரிய ரோதனையாப் போச்சு. நீ மட்டும் அது மாதிரி ஒரு வேலை செஞ்சே ஆமா... அப்புறம் நான் இன்ன செய்வேன் எப்படி நடப்பேன்னு எனக்கே தெரியாது. ஆமா.''

''உங்கூட தாண்டி ஒரே ரோதனையா இருக்குது. ஏதோ ஆண்டவன் புண்ணியத்துல இத்தனை பெரிய வீட்டுல இருக்கிறோம். பக்கத்து ரூம்புல லைட்டப் போட்டு அத்தப் படுக்க வைச்சா என்ன உனக்கு, அப்ப நீ வந்து ஆட்டு...''

''ஆண்டவன் புண்ணியத்துல நாம பெரிய வீட்டுல இருக்குறது கொளந்தையைத் தனியாப் படுக்க வச்சுப்போட்டு நாம கொஞ்சறதுக்கு இல்லேய்யா? அத்த முதல்ல விளங்கிக்க நீ. இனிமேப்பட்டு எதுவும் பேசாத. தூளியும் இங்கிட்டேதான் இருக்கணும். அத்தயும் நீதான் இன்னிக்குப் பார்த்துக்கணும்... ஆமா. ஹ...ா.....ா.....ா.....ா....வ்."



அவளது நெடிய கொட்டாவி சாத்தப்பனையும் தொற்றிக் கொள்ள அவனும் பெரியதாய்க் கொட்டாவி விட்டுவிட்டு மனசுக் குள் நிறையவும், வாயின் முணு முணுப்பாய்க் கொஞ்சமாகவும் செல்லம்மாவைத் திட்டிக் கொண்டே தூளியை ஆட்டத் தொடங்கினான். தன் எரிச்சலை யெல்லாம் தூளியைக் குலுக்கி வெளிப்படுத்தினான். குழந்தை யின் சத்தம் கொஞ்சங் கொஞ்ச மாய் மட்டுப்பட்டுக் கொண்டே வந்து பின்னர் அறவே அடங்கிப் போயிற்று.

''செல்லம்மா, ஏ செல்லம்மா, அதுக்குள்ளாறவா தூங்கிட்ட?''

சாத்தப்பன் பல்லைக் கடித்துக் கொண்டு தூங்கலானான்.

மறுநாட்காலை ஐந்துக்கெல் லாம் செல்லம்மாவுக்கு விழிப்புக் கொடுத்துவிட்டது. எழுந்து பல் விளக்கிவிட்டுச் சுறுசுறுப்பாய் இயங்கலானாள். சாத்தப்பன் இன் னும் உறங்கிக்கொண்டிருந்தான். குழந்தையும் உறங்கிக் கொண்டி ருந்தது. முந்திய இரவுக் கூத்தை எண்ணி அவளுக்குச் சிரிப்பு வந் தது. அடுப்பைப் பற்றவைத்து விட்டு அந்தப் பெரிய வீட்டைப் பூரிப்புடன் வளைய வந்தாள்.

'எத்தனை அளகான வீடு. பெரிய பெரிய ரூம்புங்க. அதுக் காகப் பெத்த கொளந்தயத் தனி யறையில் தூளிகட்டி விட்டுப் போட்றதா என்ன; அடியம்மா, எம்மாம் பெரிய வீடு. இதுமாதிரி பெரிய வீடுகள்ள இருக்கறதுக்குக் குடுத்துத்தான் வெச்சிருக்கணும். என்ன இருந்தாலும் அவரும் நானும் அதிஸ்டசாலிங்கதான். பெரிய வீட்டுல வசிக்கிற குடுப் பனை எல்லாத்துக்கும் கிட்டீ ருமா என்ன!....'

செல்லம்மா பெருமையுடன் வீட்டை ஒரு தரம் வலம் வந் தாள். சன்னல்களில் வைப்பதற் காக வந்திறங்கிச் சுவரில் சாய்த்து வைக்கப்பெற்றிருந்த இரும்பு வார்ப்படங்களின் பூவேலை அவ ளைக் கவர்ந்தது. ஒவ்வோர் அறைக்கும் ஒவ்வொரு வண்ணம் பூசப்பட்டிருந்தது. நுழைவா யிலில் இருந்த முதல் அறையின் ரோஜாப்பூ வண்ணச் சுவர்கள் அவளைப் பெரிதும் கவர்ந்தன. அடுத்து நீலச் சுவர்கள். மூன்றா வது பச்சை ரூம் எல்லாமே பிரமாதம். தன் கொடுப்பினையை எண்ணி எண்ணி மகிழ்ந்து போனாள்.

அவர்கள் படுத்துக்கொள்ளும் பச்சை வண்ண அறை தெற்குப் பார்த்த சன்னல்களையுடையது. காற்று சும்மாப்பிய்த்துக்கொண்டு போகும். ஆறுமணி நேரத் தூக் கத்துக்குப் பிறகு நன்றாக விழிப் புக் கொடுத்துவிடும். அவ்வளவு சுகமாக காற்று. அடுத்த வீட்டை மிக விரைவாய்க் கட்டிக்கொண் டிருந்தார்கள். அதைக் கட்டி முடித்துச் சுற்றுச் சுவரும் எழுப் பிட்டார்களானால், இவ்வளவு காற்று வர வாய்ப்பில்லை. தடுக் கப்பட்டு விடும். அவர்களை விலக்க முடியுமா?.'. செல்லம்மா பெருமூச்சு விட்டாள்.

நல்ல வேளை. கிணற்றுத் தண் ணீரும் நன்றாக இருந்தது. பக் கத்து வீட்டில் கரிக்கிறதாம்... உப்பு நீர் விட்டுச் சிமிட்டியைக் கலக்கக் கூடாது என்பதற்காக இங்கு வந்து நீர் எடுத்துப் போகி றார்கள். 'கிரீல்'வைத்துச் சுற்று சுவரும் எழுப்பிய பின் வீடு எப் படி இருக்கும் என்பதைச் செல் லம்மா கற்பனை செய்து பார்த் தாள். 'கிரில்லுக்குக் கறுப்புப் பெயிண்டு தானே அடிப்பாங்க.. கறுப்புத்தான் எடுப்பாகத் தெரி யும். மத்ததெல்லாம் சீக்கிரம் அளுக்குப் படிஞ்சுடும். கனத் ரோசு, நீலம், பச்சை எல்லாத் துக்கும் கறுப்புதான் பளிச்சுனு எடுக்கும்!... என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

வாசலில் சைக்கிள் மணியோ சை கேட்க ஓடி வந்து பார்த் தாள்.

''சாத்தப்பன் யாருங்க?''

''ஏங்க இந்த வீடுதான்.''

''தந்தி வந்திருக்குது....''

செல்லம்மா சட்டென்று பற் றிக்கொண்ட கிலியுடன் ஓடிச் சென்று சாத்தப்பனை எழுப்பிச் சேதியைச்சொன்னாள். தந்தியை வாங்கித் தனக்குத் தெரிந்த அரைகுறைப் படிப்பை வைத்துத் தன் அம்மாவுக்கு உடம்புமோசம் என்பதாக அவன் அதைப் புரிந்து கொண்டு, அக்கம் பக்கத்திலும் காட்டி உறுதிசெய்துகொண்டு சற்றே கண்கலங்கினான்.

'.....வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு உடனே இருவரும் குழந்தையுடன் புறப் பட்டார்கள். பூந்தமல்லியில் பத்துநாட்கள் போல் தங்கும்படி ஆகிவிட்டது. கடைசியில் அம்மா வுக்குச் சுகமானதும் கிளம்பி சென்னைக்கு வந்தார்கள். ரெயிலை விட்டு இறங்கியதுமே ''என்னங்க வீட்டை முழுசா முடிச் சிருப்பாங்களா?'' என்று செல் லம்மா ஆவலுடன் விசாரித்தாள்.

''பெய்ன்ட்டருங்க கிடைச்சி ருந்தா, இந்நேரம் முடிச்சிருப் பாங்க.''

''முடிச்சிருந்தாங்கன்னா அமக் களமா இருக்குமில்லங்க?''

சாத்நப்பன் குழந்தையின் முடி யைக் கோதியபடி தலையாட்டி னான்.

இருவரும் வீட்டை நெருங்கிய போது பிரமித்துப் போனார்கள். வீடு முழுவதுமாக முடிந்துவிட்டி ருந்தது. கான்ட்ராக்டர் சோணா சலம் தன்னைச் சுற்றி ஒரு சிறு கும்பலுடன் சிரித்துப் பேசியபடி நின்றிருந்தார். செல்லம்மா உற் சாகமாய் உள்ளே ஓடினாள்.

''ஓ, புள்ள...எங்கிட்டு ஓட்றே அவங்கெல்லாம் வந்தாச்சு, உன் னோட அலுமினியப் பாத்திரம் பண்டத்தையெல்லாம் தனியா வெளியே வெச்சிருக்குறேன் ... சாக்குப் பையில போட்டு பத் திரமா...'' என்று சோணாசலம் குரல் கொடுக்கவும் செல்லம்மா இடிந்து போய் நின்றாள்.

அவளது நடை உடனடியாய்த் தளர்ந்துவிட்டது. மெல்ல வாசல் கம்பிக் கிராதியைப்பற்றி உள்ளே நுழையப் பார்த்தாள்.

''யாரம்மா நீ?''

''இந்த வீட்டுக்கு வாட்ச்மனா யிருந்தவங்க சம்சாரமுங்க. வீட் டைப் பார்க்கலாமுங்களா? திடீர்னு ஊருக்குப்போயிட்டம்.''

''வாம்மா, வா, வா, வந்து பாரு...'' பெரியவர் கதவைத் திறந்தார். செல்லம்மா முதலில் ரோஜாப்பூ நிற அறைக்குப் போனாள். அதனுள் ஒரு பெண் உட்கார்ந்து ரேடியோ கேட்டுக் கொண்டிருந்தாள். அழகுபடுத்தப் பட்ட அறை மேலும் கவர்ச்சி கொண்டிருந்தது.

ரோஜாப்பூ நிறத்துச் சுவரை ஒரு தரம் ஆசையோடு தடவிய அவளுக்குக் கண்களில் நீர் வரி போட்டது.

''சுவத்தையெல்லாம் தொடா தம்மா. அழுக்காயிடும். கொஞ்ச நாளாவது நல்லா இருக்கட்டும். தப்பா எடுத்துக்காதே'' என்றார் பெரியவர். ●

யார் எதிர்த்தாலும், தாக்கினாலும் அதுவும் நம் நன்மைக்கே என்று எடுத்துக்கொள்ளவேண்டும். சிரித்துச் சிரித்துப் பேசுபவர்களைவிட நமது முன்னேற்றத்திற்காகவும் நல்வாழ்விற் காகவும் இடித்துக் கூறுபவர்களே நல்ல நண்பர்கள்.

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம்.ஜி.ஆர்

# மின்சாரத்தை மிச்சப்படுத்துவோம்



தொழில், போக்குவரத்து, மக்கள் தொகை இவை அதிகரிக்க எரிசக்தி தேவை அதிகமாகிறது. புதிய எரிசக்தி ஆதாரங்கள் தேடப்படுகின்றன. எரிசக்தியை மிச்சப்படுத்துவது இந்த முயற்சிகளுக்கு உறுதுணையாக அமையும்.

விறகு, மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு இவைகளை மிச்சப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மின்சாரத்தைப் பொறுத்தமட்டில் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்வதைத் தவிர வேறு சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா?

எரிசக்தி பராமரிப்புக்கும் மின்சார உபயோகத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் இடையில் பல வித்தியாசங்கள் உள்ளன.

சரியான வகையைச் சேர்ந்த மின்சாரக் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் மின்சாரத்தைச் சிக்கனமாகச் செலவிடமுடியும், ஒரு யூனிட் மின்சாரத்தை மிச்சப்படுத்துவது 1.25 யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குச் சமம் ஆகும்.

எரிசக்தி தட்டுப்பாடில்லா நாடுகளில் அரசுக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் இடையே மின்சாரப் பராமரிப்பு பற்றிய பேச்சுவார்த்தைகளும் தொடர் நடவடிக்கைகளும் இடம் பெறுகின்றன.

விளக்குகள், மின் விசிறிகள், கூலர்கள், குறைந்த சக்தி மின்சாரப் பல்புகள் இவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மின்சாரத்தை மிச்சப்படுத்துவது போல, வேறு சில சாதாரண நடவடிக்கைகள் மூலமாகவும், எரிசக்தியை மிச்சம் பிடிக்கலாம். பிரிட்ஜிகளைத் திறந்து மூடுவதைக் குறைப்பது, சோடியம் ஆவி விளக்குகளைப் பயன்படுத்துவது, சரியான வகை ஸ்விட்சுகளைப் பயன்படுத்துவதன் மூலம் மின்சாரத்தை மிச்சம் செய்யலாம்.

தொழிற்சாலைகளில்கூட சிறு சிறு நடவடிக்கைகள் மூலம் மின்சாரத்தை மிச்சம் செய்யலாம். எந்திரங்களுக்கு முறையாக உராய்வுப் பொருளைப் பயன்படுத்துதல், மோட்டார், வார்ப்பட்டைகள் பயன்படுத்தப்பட்டால் அவைகளை நழுவாமல் பொருத்துதல் முதலியன ஓரளவு மண்ணெண்ணெய்யைச் சிக்கனப்படுத்தலாம். தற்பொழுது உள்ள நீரிறைக்கும் பம்புகளுக்கு முறையான கருவிகளைப் பொருத்துவதன் மூலம் 35 சதவீத மின்சாரத்தை மிச்சம் பிடிக்கலாம். மோட்டார்கள் எரிந்து போவதைத் தடுக்க உயர் குதிரைச் சக்தி கொண்ட மோட்டார்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனைத் தவிர்த்தாலே ஆண்டொன்றுக்கு 20 கோடி கிலோ வாட் மின்சாரத்தை மிச்சம் பிடிக்கலாம்.

தொழிற்சாலைகளில் உள்ள பழைய மோட்டார்களின் உற்பத்தித் திறன் குறைவாக இருக்கும். இவற்றை அடிக்கடி பயன்படாத வேலைகளுக்கு மாற்றினால் மின்சாரம் மிச்சமாகும். மோட்டார்களில் மின்சாரச் சிக்கனத்துக்கான வேலைகளைச் செய்ய சுமாராக 100 கோடி ரூபாய் தேவை. இது 250 மெகாவாட் மின்சாரத்தை மிச்சமாக்கும். அதாவது 60 சதவீதத் திறனில் இயங்கும் 400 மெகாவாட் மின்சார ஆலை ஒன்றுக்கான செலவை மிச்சப்படுத்துவதாகும்.

ஒளியைப் பிரதிபலிக்கும் உள்ளுறுப்புக் கொண்ட விளக்குகள் மூலம் குறைந்த மின் செலவில் அதிக வெளிச்சம் பெறலாம். சரியான ஒயர்களைப் பயன்படுத்துவதன் மூலமும் மின்சாரத்தை மிச்சம் செய்யலாம்.

—பத்திரிகைத்தகவல் அலுவலகம்

## இராமநாதபுரத்தில் 'ஜவான் பவன்'

இராமநாதபுரத்தில் ரூ.30 இலட்சம் செலவில் "ஜவான் பவன்" கட்டடம் கட்டப்பட உள்ளது. இராமநாதபுரம் மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனையில் ரூ. 2.25 இலட்சம் செலவில் 12 படுக்கைகள் கொண்ட 'வார்டு' ஒன்று அமைக்கப்பட உள்ளது. தமிழ்நாடு அளவில் முன்னாள் படை வீரர் கழகம் ஒன்று துவங்கப்பட்டு, அதன் மூலம் முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர்களுக்குத் தொழில் தொடங்க ஆலோசனை மற்றும் நிதியுதவிகள் அளிக்கப்படவுள்ளன.

மாணவர் பக்கம்:



# தேனே! தேன்!

தேன் எடுக்கும் தொழில் செய்பவர்களில் ஒரு இலட்சத்தில் 0.3 பேரையே புற்று நோய் பாதித்திருக்கிறது. ஆனால் மற்ற தொழில் செய் பவர்களிடம் அதைவிட 10 மடங்குப் பேரிடம் புற்று நோய் இருக்கிறது. தேன் புற்றுநோயை எதிர்த்து நிற்கும் சக்தியுடையது.

தேனில் அதிகமாக ஹைட்ரஜன் இருப்பதாக ஒரு பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர். இதனால் தசை வீக்கம் (கட்டி) போன்ற நோயைக் குணப்படுத்த தேன் உதவுமா என்ற ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட் டுள்ளது.

சாதாரணமாக ஏற்படும் காயங்களைக் குணப் படுத்தவும் தேன் உதவுகிறது. தளர்வடைந்த இதயத் தசைகளைப் பலப்படுத்தவும், ஹீமோ குளோபினை அதிகப்படுத்தவும் தேன் பயன்படும்.

கல்லீரல் நோய் மற்றும் வர்யு தொல்லை யால் அவதிப்படுபவர்களுக்கும் தேன் சிறந்த மருந் தாகும். தேனில் உள்ள இனிப்பானது கல்லீரலில் சேர்ந்தவுடன் அழுத்தம் குறைகிறது. அதனால் கல்லீரல் சம்பந்தமான நோய்கள் குணமாகும் என ஆய்வின் மூலம் தெரிகிறது. கல்லீரலில் உள்ள திசுக்களில் குளுக்கோஸ் என்ற பொருளைத் தேன் அதிகமாக அளிப்பதால் திசுக்கள் வேலை செய்யும் வேகம் அதிகரிக்கிறது. இவை தவிர பொதுவாக களைப்பு, கண்நோய், தொண்டை நோய், ஜல தோஷம் ஆகிய நோய்களைக் குணப்படுத்தவும் தேன் உதவுகிறது.

(லூதியானாவில் உள்ள பஞ்சாப் வேளாண்மைப் பல்கலைக்கழக மாத இதழான "பிராகிரஸிவ் பார்மிங்"கில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.)

# தெலுங்கு பேசும் ரஷியப் பெண்மணி!

தெலுங்கு பேசுகிறார் ஒரு ரஷியப் பெண்மணி! அவர் பெயர்: ஓல்கா பரன்னிக்கோவா, சென்னையில் தெலுங்கு சிறு கதை எழுத்தாளர்கள் கூட்டம் ஒன்று நடந்தது. அதில் அவர் கலந்து கொண்டு தூய தெலுங் கில் பேசி எல்லாரையும் ஆச் சரியத்தில் ஆழ்த்தினார்.

இவரது தந்தையும், பாட்ட னாரும் இந்திமொழியில் புலமை பெற்றவர்கள். அவர்கள் இரு வரும் இராமாயணம், மகா பாரதம் ஆகியவற்றை ரஷிய மொழியில் பெயர்ப்பும் செய்துள்ளனர்.

இந்தி மொழியை விட, தெலுங்கு மொழி கடினமானது என்றும், அதனால் தான் 15 ஆண்டுகளுக்கு முன் தெலுங்கு கற்கத் துவங்கினேன் என்றும் பரன்னிக்கோவா கூறினார். தற்போது தெலுங்கு சிறுகதைகள் குறித்து ஆய்வு நடத்தி ஆராய்ச்சிப் பட்டம் பெறத் தகுதி பெற்றவராகத் திகழ்ந்து வருகிறார். இதுவரை 15 தெலுங்குப் புதினங்களை ரஷிய மொழியில் பெயர்த் துள்ளார்.

தாம் ஆய்வு செய்த சிறு கதைகளின் ஆசிரியர்களைச் சந்தித்துப் பேசவும், ஆந்திர மாநிலத்தில் தெலுங்கு மொழி யைச் சாதாரண மக்கள் எவ் வாறு பேசுகிறார்கள் என்பதை யும் அறியவும் விரைவில் இவர் ஆந்திர மாநிலத்திற்குச் செல்ல விருக்கிறார்.

# "தாயைத் தொழுதிடுவோம்"

—செல்லகணேசன்



அன்னம் ஊட்டி அன்பைக் காட்டி
அன்னை என்னை வளர்த்திடுவாள்!—ஒரு
சின்ன எறும்பும் என்னைத் தீண்டின்
சித்தம் சற்றே தளர்ந்திடுவாள்!

கண்ணே என்பாள் மணியே என்பாள்
கண்ணும் மணியும் அவளாவாள்!— தினம்
உண்ண மறந்து உறக்கம் துறந்து
உரித்தாய் வளர்த்து உயர்த்திடுவாள்!

எண்ணம் நிறைந்த ஈன்ற தாயை
இனிமைக் கவியால் எழுதிடுவோம்!—தெய்வம்
உண்டோ என்றால் உண்டே என்று
உலகில் அவளைத் தொழுதிடுவோம்!

## மாணவனே புறப்படுக...!

சு. ப. சுருளிசுப்பு

வருங்கால மண்விண்ணில்
வரலாற்றைப் படைத்திடவே
இருளென்னும் அறியாமை
இருக்கின்ற இழிநிலையை
உருண்டோடச் செய்கின்ற
உதயத்தின் ஒளிக்கதிராய்
பெருமைமிகும் மாணவனே
புதுப்புனலாய்ப் புறப்படுக!

இடிவானம் போலயிங்கு
இன்னல்தரும் கண்ணீரில்
துடிதுடிக்கும் ஏழைகளின்
துன்பத்துயர் நீக்கிடவே
விடியலென ஓரணியாய்
விவேகத்தை வளர்ப்பதற்கே
படிக்கின்ற மாணவனே
பண்போடு புறப்படுக!



## விளையும் பயிர்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் மொழிபெயர்ப்பியல் பட்டய வகுப்பில் பயிலும் மாணவர் திரு த. சீ. பாலு. எம்.ஏ. தமிழ் இலக்கியத்தில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற இவர், கதை, கட்டுரை, கவிதைகள் பல எழுதி வருகிறார். பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் பரிசும் பெற்றுள்ளார்.



விருதுநகர் வி.இ.நா.செ.நா. கல்லூரியில் வணிகம் மற்றும் நிருவாக இளங்கலை வகுப்பில் மூன்றாமாண்டு பயிலும் மாணவர் திரு தி. கருப்பசாமி. இவர் நகைச்சுவைத் துணுக்குகள், கதை, கட்டுரை, கவிதைகள் எழுதுவதில் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகிறார். இம்மாணவர்களைத் தமிழரசு வாழ்த்துகிறது.

## பொது அறிவுச் செய்திகள்

* இம்மியளவு என்பது 10,75,200இல் ஒரு பாகமாகும்.
* 1800இல் சிம்னி விளக்கு வழக்கில் வந்தது.
* நீல நிற அஞ்சல் பெட்டிகளை விமான அஞ்சல் நிலையங்களில் காணலாம்.
* இங்கிலீஷ் கால்வாயை முதன்முதல் விமானத்தில் கடந்தவர் - லூயிஸ் ப்ளெரியாட்
* ஐ. சி. எஸ். தேர்வில் முதன்முதல் தேறிய இந்தியர் - சுரேந்திரநாத் பானர்ஜி.
* நார்வேயில் பெண்களின் சராசரி ஆயுட்காலம் 78 ஆண்டுகளாகும்.
* செத்தும் கொடுத்த வள்ளலான சீதக்காதியின் இயற்பெயர் - ஷைகு அப்துல் காதிர்.
* முதன்முதல் கலைக்களஞ்சியம் வெளியிட்ட நாடு பிரான்ஸ்.
* இந்தியாவில் முதல் தபால்தலை 1852ல் கராச்சியில் வெளியிடப்பட்டது.
* குடையை முதன்முதல் கி.மு. 11ஆம் நூற்றாண்டில் சீனாவில் பயன்படுத்தினர்.
* நாதசுரத்தில் உள்ள துளைகள் மொத்தம் 12.
* அதிகாரப்பூர்வமான ஆங்கில பைபிள் கி.பி. 1611இல் முதன்முதலாக அச்சிட்டு வெளியிடப்பட்டது.
* முதன்முதலாக விண்வெளிப் பயணம் செய்த ரஷிய விண்வெளி வீரர் யூரி ககாரின், 1961 ஏப்ரல் 12இல் அவர் பயணம் செய்தார்.
* சீனப் பெருஞ்சுவர் ஷிஹ்வாங்டி என்ற சீன அரசனால் கி.மு. 228ல் கட்டப்பட்டது. அதன் நீளம் 2,880 கி.மீ.

—டி.எஸ். பாலு.

# அறிவியல் பொருட்காட்சியில் பரிசு பெற்ற மாணவர்



எந்த ஆண்டும் போல, இந்த ஆண்டும் சென்னையில்'அறிவியல் கண்காட்சி-1986'நடைபெற்றது. ஐ.ஐ.டி. வளாகத்தில் 13.2.86 முதல் 16.2.86 வரை நடந்த இந்தக் கண்காட்சியில் 22 பள்ளி-மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகள் கலந்துகொண்டு பல்வேறு நூதனங்களைச் செய்துகாட்டினார்கள்.

சென்னை அறிவியல் சங்கத் தலைவர், பேராசிரியர் எஸ். சுவாமிநாதன் வரவேற்புரையாற்ற, சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு.ஜி.சுப்பிரமணியன் தலைமைதாங்க, ஐ.ஐ.டி. இயக்குநர் பேராசிரியர் திரு எல்.எஸ்.ஸ்ரீநாத் துவக்க உரையாற்ற, சென்னை சுத்திகரிப்பு ஆலை நிர்வாக இயக்குநர் திரு. வி.ஆர்.தீனதயாளன் சிறப்புரையாற்ற, வனவாணி மேநிலைப் பள்ளியில் நடைபெற்ற துவக்க விழா முடிவில், செயலாளர் டாக்டர் ஆர்.ஸ்ரீதர் நன்றி கூறினார்.

இக் கண்காட்சியில் 120 வகை அறிவியல் நூதனங்கள் மாணவ, மாணவிகளால் செய்துவைக்கப் பட்டிருந்தன.

சூரிய அடுப்பில் புதுவகை, பாடும் பொம்மை, பறக்கும் நடைபாதை, தானியங்கி மின் விளக்குப் போன்றவைகள் பல, மாணவர்களாலும் மாணவிகளாலும் அறிவியல் ஆர்வத்தோடு அங்கேவைத்து விளக்கப்பட்டன. காணவந்த மக்களைப் பெரிதும் கவர்ந்தது, மாநிலக் கல்லூரி மாணவர் திரு.டி.பி.ஆனந்த் என்பவர் செய்து வைத்திருந்த அம்சங்கள்தான்.

கண்காட்சி முடிவில், வனவாணி மேநிலைப்பள்ளி முதல்வர் திருமதி ஜே.பீட்டர் வரவேற்புரையோடும், டாக்டர் கே.மணி பூஷண் நன்றியுரையோடும் நடைபெற்ற நிறைவுவிழாவில், இம் மாணவரே முதல் பரிசு பெற்றார் என்றும் அறிவிக்கப்பட்டது.

பி.ஏ.இரண்டாம் ஆண்டு படிக்கும் திரு டி.பி.ஆனந்த் சரித்திரத்தை முக்கியப் பாடமாக எடுத்துக்கொண்டிருப்பவர். +2 வகுப்பை 1982ல் முடித்த இவர் அறிவியலில் ஆர்வம் கொண்டிருந்தாலும் மிகக் குறைவான மதிப்பெண் எடுத்ததன் காரணமாகப் பல்தொழில் பயிலகத்திற்கு மனுச்செய்திருந்தும் சேர இயலாதவரானார். இரண்டாண்டுக் காலத்தை வீணே கழித்துவிட்டுப் பிறகுதான் மாநிலக் கல்லூரியில் சேர முடிந்திருக்கிறது.

20 வயது இளைஞரான இவரது கைவண்ணத்தால் உருவான 10 நூதனங்கள் அறிவியல் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

50 மீட்டரிலிருந்து 100 மீட்டர் வரையான தூரத்தில் உள்ள 4 மின் விளக்குகள் ஒரே ஸ்விட்ச்சில் மட்டுமல்ல, அதே ஸ்விட்சில் ஒவ்வொன்றாகவும், எவ்வித ஒயர்தொடர்புமின்றி எரியச் செய்யும் 'ரிமோட் கண்ட்ரோல் சிஸ்டம்' ..கைதட்டினால் எரிகிற, கைதட்டினால் நிற்கிற மின் விளக்கு..வீட்டுக்குள் யார் வந்தாலும் காட்டிக் கொடுத்துவிடும் தானியங்கி அலாரம்... தீக்குச்சியால் பற்ற வைக்கவும், ஊதினால் நின்றுவிடவும் கூடிய மின் விளக்கு... தொட்டியில் நீர் நிரம்பிவிட்டால் தானே மணியடித்து அறிவிக்கும் அலாரம் என்பது போலப் பத்து விசித்திரங்களை இவர் அங்கே செய்துவைத்திருந்தார்.



டி.பி.ஆனந்த்

''எம்.ஏ. முடித்துவிட்டு, வேறு ஏதாவது வேலையைத் தேடிக்கொண்டு அறிவியல் பணியை ஓய்வு நேரப்பணியாகத்தான் கொள்ளவிருக்கிறேன்'' என்று கூறும் மாணவர் திரு டி.பி. ஆனந்த், ''பொருளாதார ரீதியில் யாராவது ஊக்குவித்து -துணையிருந்தார்களானால் அறிவியலையே முழுநேரப் பணியாகவும் கொள்ள முடியும்'' என்றும் கூறினார்.

அறிவியல்ல்தனக்குள்ளஊக்கத்திற்கு, ரயில்வேயில் பணிபுரியும் தனது தந்தையாரும் தொலைக்காட்சி நிலைய நண்பர் ஒருவருமே முக்கியக் காரணம் என்று பெருமிதத்தோடுகூறிய திரு.டி.பி ஆனந்த், அறிவியல் கண்காட்சியிலே பங்கேற்கக் கல்லூரி மூலம் அனுப்பப்பட்டவர் அல்லர். தானே முயன்று, பலரோடும் தொடர்புகொண்டு இடம் பிடித்தவராவார்.

மின்பொறியியல் துறைக்கான முதல்பரிசு இவருக்குத் தரப்பட்ட அதே நாளில், பௌதிகத்திற்கென இரண்டாவது பரிசும், உயிரியலுக்கென மூன்றாவது பரிசும் இவருக்கு அளிக்கப்பட்டன. வனவாணி பள்ளிக்கும், டான் பாஸ்கோ பள்ளிக்கும் சுழற்கேடயங்கள் வழங்கப்பட்டன.

இந்த அறிவியல் கண்காட்சியில் மாணவர்கள் மட்டுமல்ல; மாணவிகள் பலரும் மிக ஊக்கத்தோடு கலந்துகொண்டு வியத்தகு திறமையைக் காட்டினர்.

எதிர்கால அறிவியல் உலகம் இந்த இளந்தளிர்களுக்கு மேன்மைதரும் - உலகுபுகழ் வாழ்வு வழங்கும் என்பதில் சந்தேகமில்லை!

-ராஜு




# சுற்றுலாப் பொருட்காட்சியைச் சுற்றி வந்த போது...!



திருவிழா காணும் ஊர்போலத் திகழ்ந்தது சென்னையில் உள்ள தீவுத் திடல்.

வேறொன்றுமில்லை, 1974 முதலாக, ஆண்டுதோறும் நடத்தப்படும் அகில இந்திய சுற்றுலா மட்டும் தொழில் பொருட்காட்சி இந்த ஆண்டும் எழிலுறத் தொடங்கப்பட்டிருக்கிறது.

ஜனவரி 9-ஆம் நாள் தொடங்கப்பட்ட இப்பொருட்காட்சியின் நுழைவுவாயில், திருச்சி மலைக் கோட்டையைக் குடைந்து வழி செய்துவிட்டால் எப்படியிருக்கும்? அப்படியிருக்கிறது!

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நடத்தப்படும் இந்தப் பொருட்காட்சி புதிதாக உருவாக்கப்பட்ட பெருநகரம் போலப் பொலிவுற்றுத் திகழ்கிறது.

உள்ளே நாம் நுழைந்ததுமே ''ஆண்டியானதென்னஆறுமுகா'' என்ற கே. பி. சுந்தராம்பாளின் பாடல் நமக்கு நினைவு வருகிறது. காரணம் - பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ள பழனிமலை. இந்து சமய அறநிலையத்துறையின் இந்த அரங்கத்தில் முருகக் கடவுளின் அறுபடை வீடும் அழகோடு உருவாக்கப்பட்டிருக்கிறது.

## அழகிய அரங்குகள்

சுற்றுலாத் துறை அரங்கில் நாள்தோறும் பள்ளி, கல்லூரி, இசைக் கல்லூரி மாணவ மாணவி கலை நிகழ்ச்சிகள், பலகுரல் நிகழ்ச்சி, நடனம் போன்றவை நடத்தப்படுகின்றன. புதுமுறை நடன முத்திரைகள் இந்த அரங்கின் முகப்பில் அணி செய்கின்றன.

அறிஞர் அண்ணா கலையரங்கில் சமூக - சரித்திர நாடகங்கள் தேர்ந்த திறமையாளர்களால் நாள்தோறும் நடத்தப்படுகின்றன.

மாதவி கலையரங்கில் நடத்தப்படும் கிராமீய நிகழ்ச்சிகள் நெஞ்சைக் கவர்கின்றன.

திறந்தவெளித் திரையரங்கமும் இங்கே ஒன்று உண்டு.

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி எப்படித் தோண்டியெடுக்கப்படுகிறது, எவ்வாறு அனல் மின்சார உற்பத்தி நடக்கிறதுஎன்பது நெய்வேலி லிக்னைட் கார்பொரேஷன் அரங்கத்திலும் - நமது கடலோரக் காவல் படைஎப்படிச் செயல்படுகிறது, எவ்வாறான ரோந்துப் படகுகளை - நவீன எந்திரங்களைப் பயன்படுத்தி வருகிறது என்பது கடலோரக் காவல்படை அரங்கிலும் - காஸ் அடுப்பின் மூலம் எப்படிப்பட்ட ஆபத்தெல்லாம் வரும், அவைகளைத் தவிர்க்கும் விதமென்ன, தீயணைக்கச் சுலப வழியென்ன என்பவை தீயணைப்புத் துறை அரங்கிலும், தமிழ்நாட்டு மக்கள் பெறும் வீட்டுவசதிகள் பற்றிய விவரங்கள் என்ன என்பவை தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அரங்கிலும் விளக்கப்பட்டுள்ளன.









தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்கள், தொழில் துறை, கிராமப்புற வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, சென்னை மாநகராட்சி காவல் துறை, கல்வித் துறை, ஆவின், ஆகியவற்றின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளில் அந்தந்தத் துறையின் ஆக்கப் பணிகள் விளக்கப்பட்டிருக்கின்றன.

## வெளி மாநில அரங்குகள்

வெளிமாநிலச் சுற்றுலாத் துறை சார்பில் உருவாக்கப்பட்டுள்ள அரங்குகளில் - அவ்வம் மாநிலக் கலை,பண்பாடு போன்றவைகளைக் காண முடிகிறது.

அரசின் அறிவிப்புகள் - ஆக்கப் பணிகள், நிறைவேற்றப்பட்ட திட்டங்கள், நிலைநிறுத்தப்படவிருக்கும் சாதனைகள், பல்வேறு துறைப் பாங்குகள் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஆகியவை செய்தித் துறை அரங்கிலே சீரிய முறையில் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரிய உரை, தொடர்ந்து ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கிறது.

## மாவட்ட அரங்குகள்

தமிழ்நாட்டிலுள்ள 19 மாவட்டங்களும் அமைத்துள்ள அற்புதமான அரங்குகள். தீவுத்திடலில் அண்ணா சாலைத் திக்கில் அணி செய்கின்றன. நேரில் போனால் தானா ஒவ்வொரு மாவட்டச் சிறப்புகளையும் சுற்றுலாத் தலங்களையும் கண்டுகளிக்க முடியும்? சுற்றுலாபொருட்காட்சியில்உள்ள மாவட்ட அரங்குகளுக்குச்சென்று வந்தாலே போதும், எல்லா மாவட்டங்களுக்கும் சென்று வந்த இதய நிறைவு நமக்கு ஏற்பட்டுவிடும். அம் மாவட்டங்களில் அரசு எந்திரம் ஆற்றியுள்ள, ஆற்றி வருகிற அரிய பணிகளையும் நாம் மாவட்ட அரங்குகளிலே உணர முடிகிறது. கல்வியில், தொழிலில், வேளாண்மை வளர்ச்சியில் மாவட்டங்கள் அனைத்தும் பெற்று வரும் மகத்தான முன்னேற்றங்களும் இந்த அரங்குகளிலே நமக்குத் தெளிவுறத் தென்படுகின்றன.

பொருட்காட்சி காண வரும் பெருமக்களுக்கு, 'ஓட்டல் தமிழ் நாடு' காட்டும் உபசரிப்பு வியக்கத்தக்கதாகும்.

ஒரே நேரத்தில் 108 பேர் பயணம் செல்லக் கூடியதாகப் புதிதாக சுமார் 7 இலட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்ட சிங்கார சிறுவர் ரயிலொன்று தீவுத்திடலில் அவ்வப்போது வலம் வந்து கொண்டிருக்கிறது.

மீன்,அருங்காட்சியகம்,பாம்புப் பண்ணை, திரைப்படக் கண்காட்சி, புதுமை இராட்டினம், 500 அடி உயரத்தில் பறக்கும் இரண்டு ராட்சச பலூன்கள் ஆகியவைகளும் அணி செய்யும் இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சியில் விற்பனை அங்காடிகள் 208 இருக்கின்றன. துணி வகை மட்டுமல்ல; கைவினைப் பொருட்கள், சமையல்












சாமான்கள், தின்பண்டங்கள், நூதனப் பொருட்களெல்லாம் அங்கே கிடைக்கின்றன.

**ஊனமுற்றோருக்கு உதவி**

ஊனமுற்றோருக்கும் தாழ்த்தப்பட்ட நாடோடி இனத்தவருக்கும் இந்த ஆண்டுப்பொருட்காட்சியில் கட்டணம் ஏதுமில்லாமல் அங்காடிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலாத் துறையும் உடல் ஊனமுற்றோர் புனர் வாழ்வு மையமும் சேர்ந்து வைத்துள்ள தனி அரங்கில் - ஊனமுற்றோருக்கு இலவசமாகவே கால் மற்றும் காலிபர் பொருத்தப்படுகின்றன.



அண்மையில் சுற்றுலாத்துறை செலவில், இலவசக் கலப்புத் திருமணம் ஒன்றும் இப்பொருட்காட்சியில் நடத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

எந்த ஆண்டும் இல்லாத படி, இந்த ஆண்டு இங்கே குழந்தைகள் பிரிவும் தனியே உருவாக்கப்பட்டிருக்கிறது. 'இந்திரா



காந்தி குழந்தைகள் உல்லாச உலகம்' என்கிற இப்பகுதி, குழந்தைகளை மகிழ்விக்க என்றே தனிக் கவனத்தோடு அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திறந்தவெளி அரங்கில் குழந்தைகள் குதூகலத்தோடு விளையாட விளையாட்டுச் சாதனங்கள், விளையாட்டு மூலம் கல்வியறிவை ஊக்குவிக்கும் வேடிக்கைகள், சறுக்கு விளையாட்டு, கராத்தே, ஜூடோ, சிலம்பாட்டம் கற்பித்தல், யோகாசன நிகழ்ச்சிகள், ஆட்டுச் சண்டை, கோழிச் சண்டை, இசைக்கேற்றபடி ஆடும் நீரூற்று, குதிரையேற்றம், மாஜிக், யானையேற்றம் எல்லாம் உண்டு. அவ்வப்போது விளையாட்டுப்போட்டிகளும் சிறுவர் சிறுமிகளுக்காக இங்கே நடத்தப்படுகின்றன. போட்டியிலே வெற்றி பெறும் குழந்தை விருப்பம்போல யானையிலோ குதிரையிலோ ஏறிச் சுற்றலாம் - இதுதான் பரிசு!

அண்மையில் இப்போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகளை வாழ்த்தி தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எம். பழனியாண்டி பாராட்டினார்.



நாள்தோறும் பிற்பகல் 2 மணியிலிருந்து இரவு 10 மணி வரையும், விடுமுறையிலும் விழா நாளிலும் காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரையிலும் நடைபெறும் இக்கண்காட்சியின் நுழைவுக் கட்டணம் ஒரு ரூபாய். 5 வயதுக்குக் குறைவானகுழந்தைகளுக்கும் ஊனமுற்றோருக்கும் கட்டணம் கிடையாது- பள்ளிக் குழந்தைகளுக்குக் கட்டணச் சலுகை உண்டு!

—பி.எல்.ஆர்










பெரியாறு-வைகை பாசனத் திட்டம் முதல் முதலாக 25-10-1975-ல் ரூ. 1475 இலட்சம் என மதிப்பிடப்பட்டு தமிழக அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர் உலக வங்கியில் நிதி உதவி பெறுவதற்கான திட்டம் பற்றிய முழு விவரங்களையும் நன்கு பரிசீலித்து, தற்போதைய பாசன முறையை முழுமையாக நவீனப்படுத்துவதற்கான இத்திட்டத்திற்கு ஆகும் செலவு ரூ. 4104 இலட்சம் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் தனித் தலைமைப் பொறியாளரின் கீழ் மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

**திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

வைகை அணையிலிருந்து வெளி வரும் பெரியாறு நீரை (வைகை ஆற்றில் விடாமல்) வைகை அணைக்கு 1 கி.மீ.க்குக் கீழ் எடுப்பு அணை ஒன்றின் மூலம் திருப்பி, புதிய இணைப்புக் கால்வாயின் (நீளம் 32.50 கி.மீ.) மூலம் பேரணை மதகிற்குக் கீழ் உள்ள பெரியாறு பிரதானக் கால்வாயுடன் இணைத்தல் (புதிய இணைப்புக் கால்வாய் நீக்கப்பட்டது).

பெரியாறு பிரதானக் கால்வாய், அதன் கிளைக் கால்வாய்கள் மற்றும் அதன் பகிர்மானக் கால்வாய்களை முடிந்த வரை 10 எக்டேர் பாசனப் பரப்பு வரை சிமெண்ட் காங்கிரீட் தளமிடுதல்.

திருமங்கலம் பிரதானக் கால்வாயை மேம்படுத்துதல், அதன் கிளைக் கால்வாய்கள் மற்றும் பகிர்மானக் கால்வாய்களையும் முடிந்தவரை 10 எக்டேர் பாசனப் பரப்பு வரை புனரமைப்புச் செய்தல்.

இத்திட்டத்தில் ஏற்கெனவே உள்ள கட்டுமானங்களைப் பழுது பார்த்தல்.

சிறந்த கட்டுப்பாட்டிற்கும், செயல்பாட்டுத் திறனுக்கும் கூடுதல் கட்டுமானங்கள் அமைத்தல்.

இத்திட்டத்தின்கீழ் தற்போதுள்ள குளங்களையும் ஊட்டுக் கால்வாய்களையும் அபிவிருத்தி செய்தல்.

10 எக்டேர் பாசனப் பரப்பு வரை கூடுதல் நீர் விநியோக அமைப்புகள் நிர்மாணித்தல்.

புலிப்பட்டி மதகின் கீழ் புதிய விரிவாக்கக் கால்வாய் வெட்டி பிரதானக் கால்வாய், பிரிவுக் கால்வாய் மற்றும் பகிர்மானக் கால்வாய்களை 10 எக்டேர் பாசனப் பரப்பு வரை சிமெண்ட் காங்கிரீட் தளமிடுதல்:

தற்போது உபயோகப்படுத்தப்பட்டு வரும் வாய்க்கால் கரைச் சாலைகளை அபிவிருத்தி செய்தல்.

இப்பாசனப் பரப்பில் எல்லாப் பகுதிகளையும் எக்காலங்களிலும் எளிதில் அடையக்கூடிய வகையில் சாலை வசதியளித்தல்.

விவசாய விரிவாக்கப் பணியைத் திருத்தி அமைத்தல்.

இத்திட்டத்தின் செயல்பாட்டினைக் கண்காணித்தல்.



# பெரியாறு-வைகை பாசனத் திட்டம்

**எஸ். சண்முகம்**
தனித் தலைமைப் பொறியாளர்

## திட்டத்தின் இன்றைய நிலை

இத்திட்டம் ஜூலை 1977-ல் தொடங்கப்பட்டபோது திட்டச் செலவு ரூ. 4104 இலட்சம் எனத் திட்டமிடப்பட்டிருந்தது. திட்டச் செலவில் உலக வங்கி 230 இலட்சம் அமெரிக்க டாலர்கள் உதவி அளிக்க முன்வந்து உலக வங்கி நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. உலக வங்கியுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி இத் திட்டத்தை நிறைவேற்ற ஆகும் செலவு ரூ. 7,200 இலட்சம் என்று திருத்தி மதிப்பிடப்பட்டது என்றாலும் உலக வங்கி ரூ. 7200 இலட்சத்திற்கு உரிய பங்கீட்டை உதவியாக அளிக்கத் தயக்கம் காட்டியது. எனவே இத்திட்ட முதற்கட்ட வேலைகளுக்கு ரூ. 44.50 கோடிக்கு மேற்கொள்ளச் சீர்திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்குத் தமிழக அரசு 1981-ல் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன் தொடர்பாக இத் திட்டத்தின் முதல் கட்ட வேலைகளுக்கு திருத்திய மதிப்பீடு ரூ. 4,600 இலட்சத்திற்குத் தயாரித்து மத்திய நீர்க்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. உலக வங்கி வல்லுநர்கள் தங்கள் 24-12-1981 தேதியிட்ட கடிதத்தில் தமிழக அரசுக்கு இத்திட்டத்தினால் சேமிக்கப்படும் தண்ணீரின் அளவு சிறந்த மதிப்பீட்டின்படி சுமார் 188 மில்லியன் கன மீட்டர் எனக்குறிப்பிட்டுள்ளனர்.



ஆனைமலை சரணாலயத்தில் இரட்டைக் குட்டிகளை ஈன்ற 'வள்ளி' என்ற யானை.

உலக வங்கியினர் இரண்டாவது கட்டப்பணிகள் தொடங்குவது சம்பந்தமாக ஆய்வினை மேற்கொண்டனர். இதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு இரண்டாவது கட்டப்பணிகளுக்கு ரூபாய் 38.68 கோடி (விலை ஏற்றம் நீங்கலாக) தோராய மதிப்பீடு 5-3-1983-ல் வழங்கியுள்ளது. கடந்த செப்டம்பர் மற்றும் நவம்பர் 83ல் உலக வங்கி ஆய்வுக்குழுவினர் பெரியாறு மேம்பாட்டுத் திட்டப் பகுதிக்கு வருகை தந்து இரண்டாவது கட்டத்தினை ஆய்வு செய்து, இரண்டாவது கட்ட வேலைகளுக்கு ரூ. 5845 இலட்சம் (ரூபாய் 58.45 கோடி) ஆகும் என மதிப்பிட்டு உலக வங்கி ஒப்புதல் அளித்து 350 இலட்சம் அமெரிக்க டாலர்களை அளிக்க முன் வந்துள்ளது. இதில் விவசாயப் பணிகள் உள்ளடங்கிய பண்ணை மேம்பாட்டுத் திட்டமும் அடங்கும். தமிழ்நாடு அரசு இரண்டாவது கட்ட வேலைகளுக்கு ரூ. 56.86 கோடிக்கு 23-11-1984-ல் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### இத்திட்டத்தினால் செயலாற்றப்படும் இதரப் பணிகள்

இத்திட்டத்திலுள்ள கால்வாய்களின் நீரோட்ட அளவுகள் சேகரிக்கப்பட்டு, தொடர்ந்து கண்காணிக்கப்பட்டுவருகின்றன.

வி. எச். எப். (V.H.F.) அமைத்தல்: வி. எச். எப். ரேடியோ மூலம் தகவல்களை அறிவிக்கும் பொருட்டு நிலையங்கள் அமைக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதற்கான கட்டுமானப் பணிகளில் 15 கம்பங்களும் மற்றும் ஒரு டவர் வேலையும் முடிவுற்றுள்ளது. மற்ற கட்டுமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு வி. எம். மங்க்ளிக் அவர்களது பெரியாறு வைகைத்திட்டம் செயல்பாடு குறித்த அறிக்கையில் அரசு சில சிபாரிசுகளை ஏற்றுக் கொண்டுள்ளது.

முதல் கட்டத்தில் திட்டமிட்டபடி இத்திட்டத்தின் பணியாளர் பயிற்சி முடிக்கப்பட்டு விட்டது.

விவசாய விரிவாக்கத் திட்டப் பணிகளில் பெரும்பாலான பணிகள் விவசாயததுறையினராலும், மதுரை தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகத்தாலும் நிறைவேற்றப்படுகின்றன. இதை நிறைவேற்ற 10 இடங்களில் கட்ட வேண்டிய அலுவலகம் இணைந்த குடியிருப்புக் கட்டடங்கள் முடிக்கப் பெற்று விவசாயத் துறையின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

முதல் கட்டத்தின் பணிகள் எல்லாம் முடிந்துவிட்டன. இரண்டாவது கட்டத்தின் திட்ட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

உத்தேசிக்கப்பட்ட 1,63,362.86 ஏக்கர் பாசனப் பரப்பு வரையறை செய்து முடிக்கப்பட்டுள்ளது. ஆயக்கட்டு மதிப்பீடு கீழே விவரித்துள்ளபடி தயாரிக்கப்பட்டு வருகிறது.

கிராம அலுவலகக் கணக்குகளின்படி சரிபார்க்கப்பட்ட பாசனப்பரப்பு — 1,53,942.51 ஏக்கர்.

மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டிய அனுப்பப்பட்ட வரைவு அறிக்கையின்படி பாசனப் பரப்பு—10,637.74 ஏக்கர்.

# ஊர் முன்னேற ஊரக வளர்ச்சி முகமை ஓர் அடிக்கல்

காமராஜர் மாவட்டத்தில் உள்ள கிராமங்கள் ஒவ்வொன்றும் மாநில அரசின் பல்வேறு நலத்திட்டப்பணிகளால் வளம் பெற்று வருகின்றன. மத்திய, மாநில அரசின் மணியான திட்டமான மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் செயல்படும் திட்டங்கள் இச்சின்னஞ் சிறிய கிராமங்களை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்கின்றன.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

இத்திட்டத்தின் மூலமாக வறுமைக்கோட்டிற்குக் கீழ்உள்ள மக்களை 7-வது ஐந்தாண்டுத் திட்டக் கோட்பாட்டின்படிஆய்வு செய்து தேர்ந்தெடுத்து 4,900 நபர்களுக்கு வறுமைக்கோட்டிலிருந்து விடுபட அரசு மானியத்துடன் கூடிய கடன் வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு ரூ.126.66 இலட்சம் வழங்க,திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலமாக 20-1-1986 ஜனவரி முடிய 4116 நபர்களுக்கு ரூ.156 இலட்சம் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 2138 நபர்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு 79 இலட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் பெண்கள் 1709 பேர். அவர்களுக்கு ரூ.48 இலட்சம் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது.

வேலையில்லாத் திண்டாட்ட நிலையினைப் போக்க இம் மாவட்டத்திலுள்ள 397 இளைஞர்களுக்குத் தொழிற் கல்விப் பயிற்சி அளிக்க நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் தொழில் வர்த்தக உதவித் திட்டத்தில் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஏதுவாக புதிய திட்டங்கள் வரைவதற்குத் தீர்மானித்துள்ளோம். இத்திட்டம் 4 அல்லது 5 நபர்களை ஒருங்கிணையச் செய்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு வகை செய்கிறது.

**எஸ். தீனதயாளன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காமராஜர் மாவட்டம்.**





## சென்ற இதழில்....

சென்னைக்கு வருகை புரிந்த போப்பாண்டவர் 2-வது ஜான் பால் அவர்களை மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும் வரவேற்ற நிகழ்ச்சியை சென்ற இதழ் (16.2.1986) அட்டை அலங்கரித்தது.

சூரிய வெப்ப அடுப்பு மற்றும் தட்டெழுத்துப் பயிற்சி நிலையம் போன்ற முன்னேற்றத் திட்டங்களையும், கால்நடை பராமரிப்புத் திட்டத்தில் பால்மாடுகள் வாங்குவதுடன் அதிக தரமான கறவை மாடுகளை உற்பத்தி செய்வதற்கு ஆவன செய்து வருகிறோம். இதர கால்நடைப் பணிகளாகச் செம்மறியாடு வளர்ப்பு, சீமைப்பன்றி வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின்மூலம் தனி நபர் வருமானம் கூடுதலாகக் கிடைக்க வகை உள்ளது.

### தீவிர வேளாண்மை உற்பத்திப் பெருக்குத் திட்டம்

இம்மாவட்டத்தில் பயிர்செய்யப்பட்டு வரும் நிலங்களில் 75 சதவீத நிலத்தினை சிறு, குறு விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர். இம்மாவட்டத்தில் நிரந்தர நீர்ப்பாசன வசதி கிடையாது. மேலும் பருவமழையும் போதிய அளவு பயிர் வளர்ச்சிக்குக் கிடைப்பதில்லை. சாகுபடியாகும் பெரும் நிலப்பரப்பு மானாவாரிக் குளங்களையே எதிர்நோக்கி இருக்கின்றது. எனவே இச்சிறு, குறு விவசாயிகள் நீர்ப்பாசன மேம்பாட்டிற்கோ நிலத்தடி நீரை உபயோகம் செய்வதற்கோ போதிய நிதி வசதி இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இதனால் விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலிருந்து இவர்களை விடுவிக்க இத்திட்டமானது மத்திய அரசின் மானியம் பெற்று 1983-84-லிருந்து செயல்பட்டு வருகின்றது.

நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் வாயிலாக 3671 சிறு, குறு விவசாயிகள் நீர்ப்பாசனம், நிலச் சீர்திருத்தம் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தி உயர் விளைச்சல் பெற 49.5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 20-1-86 முடிய 581 நபர்கள் ரூ. 32.78 இலட்சம் மானியத்தோடு கூடிய கடன் பெற்றுள்ளனர். இவ்வாண்டு இத்திட்டத்தின் சிறப்பு அங்கம் 'நபார்டு' செயல்முறைக்கு உட்பட்டு நபார்டால் அங்கீகரிக்கப்பட்ட கடன் உச்சவரம்பிற்கு $33\frac{1}{3}$ சதவீதம், 25 சதவீதம் மொத்த மதிப்பீட்டில் மானியம்



வழங்கப்படுகிறது. இதன் மூலம் குறிப்பாக ஒரு குறு விவசாயிக்கு பம்பு செட்டோடு கூடிய கிணற்றிற்கு ஆகும் செலவாகிய 21,000 ரூபாயில் சுமார் ரூ. 7,000 வரை மானியம் கிடைக்கிறது. இத்திட்டம் சிறு, குறு விவசாயிகளுக்குப் பெரும் நன்மை அளிக்கும் திட்டமாகும்.

### ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்

விவசாயக் கூலி வேலை செய்ய இயலாத காலங்களில் மேற்படி விவசாயக் கூலிகளுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இதன் மூலமாக நாள் ஒன்றுக்கு கூலியாக ரூ. 8 வரை வழங்கப்படுகிறது. ரூ. 8யும் ரொக்கமாகக் கொடுப்பதற்கு பதில் 1 கிலோ அரிசியும் 2 கிலோ கோதுமையும் ரொக்கம் ரூ.3.15 ஆக மொத்தம் ரூ. 8 கொடுக்கப்படுகிறது. விவசாய வேலை இல்லாத காலங்களிலும், பருவம் பொய்த்த நேரத்திலும், மக்களுக்குப் பயன்பட ஏற்படுத்தப்பட்ட திட்டம் இது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின் வாயிலாகச் சமுதாயக் கூடங்கள், கிட்டங்கிகள், சாலை அமைப்பது போன்ற 770 வேலைகள் ரூ.128.5 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளது. இவற்றில் 754 வேலைகள் முடிவு பெறப்பட்டு ரூ. 75 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. ரூ. 5.78 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

### வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இம்மாவட்டத்தில் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள சிவகாசி, சாத்தூர், வெம்பக்கோட்டை, காரியாபட்டி, நரிக்குடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், நிலத்தடி நீரைச் சிறந்த முறையில் பயன்படுத்தவும், விவசாய முன்னேற்றங்களுக்காகவும் கோழி வளர்ப்பு, கால்நடை பராமரிப்பு, புல்வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பட்டுப்பூச்சி வளர்ப்பு, காடு வளர்ப்பு போன்ற பணிகளுக்காக ரூ.75.79 இலட்சத்தில் திட்டம் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரையிலும் ரூ. 25 இலட்சம் இத்திட்டத்தில் செலவிடப்பட்டுள்ளது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


புதிய வண்ண
துணி வகைகளுக்கு
உள்ளம் கொள்ளை கொள்ளும்
வண்ணங்களிலும் டிசைன்களிலும்
சி:.பான், பாலியெஸ்டர், பட்டு
மற்றும் பருத்தி நூல் சேலைகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

